a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

மே 2015 May | இதழ் 292 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION










25 வது ஆண்டில் 25th Year

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**ஆரம்பம்**
பெப்ரவரி 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**தொலைபேசி**
**416 920 9250**
**தொலைநகல்**
416 921 6576

**மின்னஞ்சல்**
**tamilsinfo@sympatico.ca**

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் &**
**தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

**விநியோக முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**விநியோக இணைப்பாளர்**
இ. சிவலிங்கம்

**பொதுமக்கள் தொடர்பு**
என். குமாரதாஸன்
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

## வரவும் செலவும்

கனடிய மத்திய அரசாங்கத்தினதும் ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்தினதும் வரவு செலவுத் திட்டங்கள் கடந்த மாதம் அந்தந்த அரசாங்கங்களின் நிதியமைச்சர்களினால் சமர்ப்பிக்கப்பட்டன.

கடந்த ஏழு வருடங்களில் முதன்முறையாக கனடிய மத்திய அரசின் வரவு செலவுத் திட்டம் சமநிலைப்படுத்தப்பட்ட ஒன்றாக தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதற்கான முக்கிய காரணமாக, இந்த வருடம் மத்திய அரசாங்கத்துக்கான தேர்தல் நடைபெறவிருப்பதைக் குறிப்பிடலாம். ஆக, இதனை ஒரு தேர்தல் கால வரவு செலவுத் திட்டம் என்று குறிப்பிடுவதே பொருத்தமானது.

எந்தக் கட்சி அரசாங்கத்திலிருந்தாலும் இப்படித்தான் தேர்தல் ஆண்டில் வரவு செலவுத் தட்டம் தயாரிக்கப்படுமென்பது வழமையான விடயம்.

ஆனாலும், வரவு செலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்திவதிலும் பார்க்க, வேலைவாய்ப்பு மற்றும் சமூக நலத்திட்டங்களுக்கு அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டுமென கனடிய ஊடகமொன்று நடத்திய கருத்துக் கணிப்பு தெரியப்படுத்தியுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் தோமஸ் முல்கெயர், பொருளாதார மாயாஜால வித்தையின் ஊடாக பற்றாக்குறை மறைக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஒன்ராறியோ மாகாணத்தின் வரவு செலவுத் திட்டம் 8.5 பில்லியன் பற்றாக்குறையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதித்துறை மொழியில் இதனைத் துண்டுவிழும் தொகை என்பர்.

பொதுமக்களுக்கு நன்மையளிக்கும் திட்டமெதுவும் மாகாண வரவு செலவு அறிவிப்பில் இடம்பெறவில்லையென எதிர்க்கட்சிகள் சாடியுள்ளன.

மாறாக, மாகாண வரியிறுப்பாளர்களுக்குப் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் 'ஹைட்றோ வண்' எனப்படும் மின்சார உற்பத்தி விநியோகத்தின் அறுபது வீதத்தினை தனியார் மயப்படுத்தும் அறிவிப்பை இவர்கள் சுட்டியுள்ளனர்.

இதன் மூலம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் ஒன்பது பில்லியன் டாலர்களில் நான்கு பில்லியன்கள் ஒன்ராறியோவின் பொதுப்போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுமென மாகாண நிதியமைச்சர் சார்ள்ஸ் சூசா தெரிவித்துள்ளதை ஏற்கும் நிலையில் எதிர்க்கட்சிகள் இல்லை.

அடுத்த ஜனவரியில் மின்கட்டண அதிகரிப்பு வருமென்று இப்போதே அறிவிக்கப்பட்டுவிட்டது. அதே சமயம், தனியார் வர்த்தக நிறுவனங்களில் 'பியர்' விற்பனை செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுபான விற்பனையை இலகுவாக்கியதன் ஊடாக மின்கட்டண அதிகரிப்பை கத்லீன் வின் அரசாங்கம் மறைக்கப் பார்ப்பதாக என் டி. பியின் தலைவர் அன்ட்ரியா ஹொவார்ட் தெரிவித்திருப்பதில் உண்மையில்லாமல் இல்லை.

ஒரு அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் (பட்ஜட்) என்பது, எப்போதும் அரசாங்கத்துக்கான வருவாயை அதிகரிக்க மக்கள்மீது சுமையைக் கூட்டுவதே என்பது எழுதப்படாத ஒரு நியமம்.

இதற்குக் கனடா மட்டும் விதிவிலக்காக முடியுமா?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojoni Kumaradasan

**Circulation Manager**
R. R. Rajkumar

**Circulation Coordinator**
R. Sivalingam

**Public Relation**
N. Kumaradasan
P. Sivasubramaniam
Pon. Sivakumaran

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறன்ரோ பெரும்பாக சனத்தொகை 60 லட்சம்

# Metro Toronto Population blasts above six million

றொறன்ரோ பெரும்பாகத்தின் சனத்தொகை அறுபது லட்சத்தை (ஆறு மில்லியன்) தாண்டி விட்டதாக கனடிய சனத்தொலை புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடைசியாக சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி றொறன்ரோ பெரும்பாகத்தின் சனத்தொகை 6,055,724 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், கியுபெக் மாகாணத்திலுள்ள மொன்றியல் நகரின் சனத்தொகையும் நாற்பது லட்சத்தை (4,027,121) எட்டியுள்ளதாக சனத்தொகைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

Toronto's metropolitan has breached six million and Montreal's has cracked four million, according to Statistics Canada.

According to the data the agency released, there were 6,055,724 people in the Greater Toronto Area, The population of Metropilitan Montreal stood at 4,027,121.

கனடாவின் மொத்தச் சனத்தொகை 35 மில்லியனாகும். இதில் றொறன்றோவும் மொன்றியலும் சேர்ந்த தொகை 29 வீதமென்றும், றொறன்ரோ தனித்து பதினேழு வீதமென்றும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

Together, the two Central Canadian metropolities host 29% of all Canadians, with Toronto alone for 17% of Canada's 35 million people.

வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறுபவர்களே றொறன்ரோ மற்றும் மொன்றியல் சனத்தொகை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும்.

அத்லாந்திக் மாகாணங்களின் கூட்டுச் சனத்தொகையை விட, றொறன்ரோ பெரும்பாகம் இரண்டு மடங்கு சனத்தொகையைக் கொண்டது. கனடாவில் மூன்றாவது அதிகளவு சனத்தொகையைக் கொண்ட நகரமாக வன்கூவர் (2,470,289) உள்ளது.

கல்கேரி மற்றும் எட்மன்டன் ஆகிய நகரங்கள் முறையே 1,406,721 மற்றும் 1,328,290 சனத்தொகையைக் கொண்டுள்ளன.

# கனடிய மத்திய அரசுத் தேர்தல் அக்டோபர் 19 அல்லது அதற்கு முன்னர்! ஏற்பாடுகளில் மூன்று கட்சிகளும் தீவிரம்

கனடிய மத்திய அரசுக்கான பொதுத் தேர்தல் முன்னர் தீர்மானிக்கப்பட்ட ஒழுங்கு முறைப்படி நடக்குமாயின், வரும் அக்டோபர் மாதம் 19ம் திகதி இடம்பெறவேண்டும்.

ஆனால் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் விரும்பினால் அதற்கு முன்னரும் நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத்தேர்தலை நடத்துமாறு கவர்னர் ஜெனரலைக் கேட்கலாம். அப்படிக் கேட்பாரானால் தேர்தல் அக்டோபருக்கு முன்னர் எந்த வேளையிலும் நடைபெறலாம்.

கனடிய மத்திய அரசின் வரவு செலவுத் திட்டம் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த ஏழு வருடங்களில் முதல் முறையாக சமப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதை அவதானிக்கையில், இதனை தேர்தலுக்கான ஒன்றாகவே கருத இடமுண்டு. பொதுவாக அவ்வாறான அபிப்பிராயத்தையே பல ஊடகங்களும் வெளிப்படுத்தியுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னரே நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜோ ஒலிவரால் தயாரிக்கப்பட்ட இந்த வரவு செலவுத்திட்டம், ஸ்டீபன் காப்பர் அரசாங்கத்தின் பதினோராவது வரவு செலவுத் திட்டமாகும். இதுவே இந்த அரசாங்கத்தினது இறுதி வரவு செல்வுத் திட்டமென்று எதிர்க்கட்சியினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நடைபெறப்போகின்ற தேர்தல் தொடர்பான வெவ்வேறு கருத்துக் கணிப்புகள் வெளிவர ஆரம்பித்து விட்டன. எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமாட்டா என்றும், எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும் அது சிறுபான்மை அரசாகவே இருக்குமென்றும் ஒரு கணிப்புத் தெரிவித்துள்ளது.

மூன்று பிரதான கட்சிகளின் தலைவர்களில் பிரதமராக வரும் செல்வாக்கைக் கொண்டவர் யார் என்ற மற்றொரு கருத்துக் கணிப்பில் ஸ்டீபன் ஹாப்பரே முதலிடத்தில் நிற்கின்றார். இரண்டாமிடத்தில் என். டி. பி கட்சியின் தலைவர் தோமஸ் முல்கெயர் உள்ளார். அடுத்த பிரதமராக வருவரென பலராலும் எதிர்வு கூறப்பட்டுவரும் லிபரல் தலைவர் ஜஸ்ரின் ரூடோ மூன்றாமிடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். இவர்கள் மூவரும் முறையே 38 வீதம், 31 வீதம், 30 வீதமான ஆதரவுகளைப் பெற்றுள்ளனர்.


மறுதரப்பில், என். டி. பி கட்சியுடன் கூட்டணியொன்றை உருவாக்கும் எண்ணம் தமக்கில்லை என்றும், நூறு சதவீதம் அப்படியான ஒரு சிந்தனையைத் தாம் எதிர்ப்பதாகவும் லிபரல் தலைவர் ஜஸ்ரின் ரூடோ தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிப்பு எந்த வேளையிலும் வரலாமென்ற எதிர்பார்ப்பில், சகல அரசியல் கட்சிகளும் வேட்பாளர் தெரிவில் தீவிரம் செலுத்தி வருகின்றன. அநேகமான தொகுதிளுக்கும் அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட்டு விட்டனர்.

இம்முறைத் தேர்தலில் தமிழர்கள் முன்னரிலும் பார்க்கக் கூடிய இடங்களில் போட்டியிடும் சாத்தியம் காணப்படுகின்றது. கனடாவின் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான என். டி. பி கட்சியின் ராதிகா சிற்சபைஈசன், புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்காபரோ வடக்குத் தொகுதியில் போட்டியிடுகின்றார்.

அதற்கு அருகாமையிலுள்ள ஸ்காபரோ றூஜ்றிவர் தொகுதியில் லிபரல் மற்றும் என். டி. பி கட்சிகளின் சார்பிலான வேட்பாளர்கள் இருவரும் தமிழர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு கன்சர்வேடிவ் கட்சியின் சார்பிலும் தமிழர் ஒருவரை வேட்பாளராக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றது.

இதுதவிர இன்னொரு தமிழரும் றொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள மற்றொரு தொகுதியிலிருந்து என் டி. பி கட்சி சார்பில் போட்டியிடலாமெனத் தெரியவந்துள்ளது.



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ரொறன்ரோ யுனியன் ரயில் நிலையத்திலிருந்து பியர்சன் சர்வதேச விமான நிலையத்துக்கான நேரடி ரயில் சேவை இந்த மாதம் ஆறாம் திகதி முதல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது 25 நிமிடம் பிடிக்கும் கடுகதி ரயில் சேவையாக இருக்கும். பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு தடவை, தினமும் பத்தொன்பதரை மணித்தியாலங்களுக்கு இச்சேவை இடம்பெறும். இதற்கான ஒரு வழிக்கட்டணமாக 27 டாலர் ஐம்பது சதம் அறவிடப்படும்.

18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கனடிய நிதியுதவியை இன்னமும் சுமார் இரண்டு லட்சம் குடும்பத்தினர் பெறவில்லையென்றும், இவர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கனடிய சமூக அபிவிருத்தி அமைச்சர் பியர் பொலிவ் இது தொடர்பான அறிவித்தலொன்றை விடுத்துள்ளார். இத்திட்டத்தின் கீழ் ஆறு வயதுக்கும் 17 வயதுக்குமிடைப்பட்ட பிள்ளைகளுக்கு வருடம் 720 டாலர்கள் கிடைக்கும். குடும்பமொன்று சுமார் 2,000 டாலர்களைப் பெறமுடியும்.

ஒன்ராறியோ மாகாணத்தில் பியர் குடிபானத்தைப் பெறுவதற்கு இனிமேல் அதற்கான மதுபான விற்பனை நிலையங்களுக்கு மட்டும் செல்லத் தேவையில்லை. அண்மையிலுள்ள தனியார் கடைகளிலும் அவற்றைப் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மாகாண முதலமைச்சர் கத்லீன் வின் அறிவித்துள்ளார். பியர் மீதான வரியை அதிகரிப்பதன் மூலம் 2019ம் ஆண்டளவில் சுமார் நூறு மில்லியன் டாலர்களைக் கூடுதலாகப் பெறமுடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடிய மத்திய அரசாங்கம் கடந்த மாதம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தின் கீழ், வரி செலுத்தாத சேமிப்புத் திட்டத்தின் கீழ் ஒருவர் வருடாந்தம் செலுத்தும் தொகையின் உச்சத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலம் ஒருவர் ஆகக்கூடியதாக 5,500 டாலர்களை மட்டுமே வருடமொன்றுக்குச் சேமிப்பாக வைப்பிட முடியும். செலுத்த முடியும். ஆனால் இத்தொகை புதியதிட்டத்தின் கீழ் பத்தாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

'கிறடிற் கார்ட்' எனப்படும் கடனட்டைகளை வைத்திருப்பவர்களுக்குச் சில விடயங்களில் பாதுகாப்பு வழங்கும் திட்டமொன்றைக் கனடிய மத்திய அரசு தயாரித்துள்ளது. 2010ம் ஆண்டில் இவ்விடயத்தில் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாகப் புதிய விதிகள் அமையும். கடனட்டையின் உச்ச எல்லை தாண்டிக் கொள்வனவு செய்வது, 'சிமாட்' போன் மூலம் பொருட்கள் பெறுவது போன்றவற்றின் கொடுப்பனவுகளில் நுகர்வோர்களுக்குப் பாதுகாப்பளிப்பதே புதிய திட்டமாகும்.

கடந்த மாதம் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற ரொறன்ரோ பொலிஸ்மா அதிபர் பில் பிளேயர் ஸ்காபரோ வைத்தியசாலை பவுண்டேஷனின் இயக்குனர் சபை உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏப்ரல் 25ல் இவர் ஓய்வு பெற்ற மறுதினமே இந்த அறிவித்தல் வெளியானது. ஸ்காபரோவின் நீண்டகால குடியிருப்பாளர் எனும் வகையில், லோரன்ஸ்/மக்கொவானில் அமைந்துள்ள வைத்தியசாலைக்குச் சேவை செய்வதைத் தாம் விருப்புவதாக பிளேயர் தெரிவித்துள்ளார்.

ரொறன்ரோ நகரிலுள்ள தொழில் நிறுவனங்கள் அங்கு பணியாற்றுபவர்களில் ஆகக் குறைந்தது பத்து வீதத்தினரையாவது ரொறன்ரோ நகரிலுள்ள இளையோருக்கு வழங்க முன்வர வேண்டுமென ரொறன்ரோ மேயர் ஜோன் ரோறி வேண்டுகோள் விடுத்துள்ளார். இங்குள்ள வேலையில்லாதோரின் தொகையைக் குறைக்க உதவுமென கூறியுள்ள மேயர் ரோறி, தற்போது இருபது சதவீதமானவர்கள் ரொறன்ரொ நகரில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## வேலையில்லாத வேலைக்கு 95,000 டாலர் செலவு

ரொறன்ரோ போக்குவரத்துச் சபை (ரி. ரி. சி) வாரமொன்றுக்கு வேலைசெய்யாது காத்திருக்கும் சமயாசமய சாரதிகளுக்கென 95,000 டாலர்களைச் செலவிடுகின்றது. நிரந்தர சாரதிகள் ஏதாவது காரணத்தால் வேலைக்கு வராதவிடத்து அவர்களுக்காகப் பணியாற்றவென இவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள் - ளார்கள். ஆனால் இவர்கள் தினமும் ஐந்து மணித்தியாலங்கள் வரை வேலையின்றி 'சும்மா' இருந்துவிட்டுச் செல்றாலும், அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டியுள்ளது. இதனால் வாராவாரம் சுமார் 95,000 டாலர்கள் செலவாகின்றது.

## வாகனக் காப்புறுதிக்கு அதிக தொகை செலுத்தும் ஒன்ராறியோ சாரதிகள்

கனடாவின் மற்றைய மாகாணங்களைவிட ஒன்ராறியோ மாகாண வாகனங்களுக்கு காப்புறுதியாக அதிக நிதி செலுத்தப்படுகின்றதென்பது தெரிய வந்துள்ளது. 2013ம் ஆண்டின் தரவின்படி, ஒன்ராறியோ சாரதிகள் ஒரு வருடத்தில் 840 மில்லியன் டாலர்களைச் செலுத்தியுள்ளனர். கடந்த வருடம் கொண்டுவரப்பட்ட சட்டத்துக்கிணங்க, ஒன்ராறியொவிலுள்ள 120 காப்புறுதி நிறுவனங்களில் 21 நிறுவனங்கள் கட்டணத்தை பத்து வீதத்தால் குறைத்திருப்பதாக மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது.

## குறைந்த வருவாய்க்கு மின் கட்டணம் குறைப்பு

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள குறைந்த வருவாயுள்ள குடும்பங்களின் மின் கட்டணத்தில் குறைப்பு ஏற்படுத்தப்படுமென மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது. 2016 ஜனவரியில் அமுலுக்கு வரவுள்ள புதிய மின்கட்டண உயர்வின்போது, வருடத்துக்கு ஐம்பதாயிரத்துக்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின் கட்டணம் குறைக்கப்படும். பனிக்கால மின் பாவனை அதிகரிப்பு இவ்விடயத்தில் முக்கிய கவனிப்பைப் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் மோடிக்கு கனடாவில் மகத்தான வரவேற்பு

கடந்த மாத நடுப்பகுதியில் மூன்று நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு கனடாவுக்கு வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒட்டாவா, ரொறன்ரோ, வன்கூவர் ஆகிய நகரங்களில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. கடந்த நாற்பது ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் கனடாவுக்கு விஜயம் செய்தது இதுவே முதன்முறையாகும். 280 மில்லியன் டாலர்கள் பெறுமதியான யுரேனியத்தை அடுத்த ஐந்து வருட காலத்துக்கு இந்தியாவுக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் கனடா உறுதி செய்யும் பிரகடனத்தில் இரு தலைவர்களும் ஒப்பமிட்டனர். கனடா இந்தியாவுக்கு யுரெனியத்தை வழங்கு-வதானது, இந்தியா மீது கனடா வைத்திருக்கும் நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது என்று பிரதமர் மோடி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இரு தலைவர்களும் பங்குபற்றிய சில நிகழ்வுகளை கீழுள்ள படங்களில் காணலாம்.







# ரொறன்ரோவின் முதலாவது கறுப்பின பொலிஸ்மா அதிபர்

## Toronto's First Black Police Chief



ரொறன்ரோவின் புதிய பொலிஸ்மா அதிபராக 52 வயதான மார்க் சான்டர்ஸ் (Mark Saunders) கடந்த மாதம் 26ம் திகதி பதவியேற்றார். கடந்த இரு வருடங்களாக ரொறன்ரோவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய இவர், பொலிஸ் சேவையில் 32 ஆண்டுகள் பணியாற்றி அனுபவம்பெற்ற மூத்தஅதிகாரி. கொலைகள் துப்பறியும் பிரிவு, போதைவஸ்து தடுப்புப் பிரிவு போன்றவைகளில் விசேட பயிற்சி பெற்றவர். மெக்சிக்கோவைப் பூர்வீகமாகக் கொண்ட பெற்றோருக்கு இங்கிலாந்தில் பிறந்து, சிறு வயதிலேயே கனடாவுக்குக் குடிபெயர்ந்த இவரே ரொறன்ரோவின் பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்ற முதலாவது கறுப்பினத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பத்து வயது முதல் இருபத்தாறு வயது வரையான நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர், 5500 பொலிஸ் உத்தியோகத்தர்களையும், 2500 சிவிலியன் பணியாளர்களையும் கொண்ட கனடாவின் பெரிய பொலிஸ் பிரிவின் அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

# ஒன்ராறியோ என். டி. பி. யின் பிரதித் தலைவராக ஜக்மீற் சிங்

## First Turban Wearing Sikh as Deputy Leader of Ontario NDP



ஒன்ராறியோ என். டி. பி கட்சியின் பிரதித் தலைவராக மாகாண சபையின் பிராம்லி-கோர்-மோல்ரன் தொகுதியின் உறுப்பினர் ஜக்மீற் சிங் (Jagmeet Singh) நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த நான்கு ஆண்டுகளாக மாகாண சபை உறுப்பினராக -விருக்கும் இவரே, ஒன்ராறியோ மாகாண சபைக்குத் தெரிவான முதலாவது தலைப்பாகை அணிந்த சீக்கியர். அத்துடன் ஒன்ராறியோ அரசியல் கட்சியொன்றின் உயர் பதவிக்கு நியமனமான முதலாவது சீக்கியர் என்ற பெருமையையும் இப்பொது பெற்றுள்ளார். கனடாவில் பிறந்து வளர்ந்த இவர் இரு வருடங்களுக்கு முன்னர் இந்தியா செல்ல விசாவுக்கு விண்ணப்பித்தபோது அது மறுக்கப்பட்டவர். இந்திய அரசின் மனித உரிமை மீறல்களை இவர் பகிரங்கமாகக் கண்டித்து வந்ததே இதற்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் கனடியப் பொதுத் தேர்தலில் என். டி. பி அபேட்சகராகப் போட்டியிட இவர் முயற்சித்தாராயினும் அது கைகூடாதது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# செயற்கை இனிப்புகளை பாவிக்கலாமா?

செயற்கை இனிப்புகளை உபயோகிக்கலாமா? அவை ஆபத்தற்றவையா? அருகில் இருந்தவர்கள் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். தொழில்சார் அமைப்பின் செயற்பாட்டுக் குழுக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது.

பெரும்பாலானவர்கள் சீனி போடாமல் தேநீர் குடித்தார்கள். ஒரு சிலர் ஒரு கரண்டி மட்டும் போட்டார்கள். இவர் மட்டும் மூன்று கரண்டி சீனி போட்டு நாக்கைச் சப்புக்கொட்டினார்.

Sugar is an addiction என்பதற்கு இவர் ஒரு உதாரணம். இப்படிச் சீனி குடிப்பவருக்கு நீரிழிவு வந்தால் என்னவாகும். இனிப்பே சாப்பிடாமல் மாய்ந்து போவாரா?

செயற்கை இனிப்புக்கள் கிடைக்கின்றனவே! அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாமா?

அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துகளுக்கான அதிகார சபையானது acesulfame potassium, aspartame, saccharin, sucralose, neotame and advantame ஆகிய செயற்கை இனிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றில் பல இலங்கையிலும் கிடைக்கின்றன.

நீரிழிவாளர்களுக்கும், உடல் எடை அதிகரித்தவர்களுக்கும் நல்லதல்ல. காரணம் அதில் கலோரி வலு அதிகம். குருதிச் சீனியின் அளவையும் உடல் கொழுப்பையும் எடையையும் அதிகரிக்கும். அத்தகைய இனிப்புப் பிரியர்களின் தேவைகளை ஈடுசெய்யவே, கலோரி வலுக் குறைந்த இனிப்புகளான செயற்கை இனிப்புகள் சந்தைக்கு வந்தன. இவற்றின் நன்மை என்னவெனில் கலோரி வலு குறைவாக இருக்கும் அதேவேளை அவற்றின் இனிப்புச் சுவையானது சீனியை விடப் பல மடங்கு அதிகமாகும். உதாரணமாக 30 மிகி அளவேயான aspartame 5 கிராம் அளவு சீனியின் இனிப்புச் சுவையைக் கொடுக்க வல்லது.

எனவே பல நோயாளர்கள் தாங்களாகவே அல்லது மருத்துவரின் ஆலோசனையுடன் அத்தகைய செயற்கை இனிப்புகளை உணவு மற்றும் நீராகாரம் போன்றவற்றில் சேர்த்துக் கொள்கிறார்கள். ஒரு கல்லில் இரு மாங்காய்கள். இனிப்புச் சுவையை உண்ண முடிகிறது. ஆனால் அதே நேரத்தில் இரத்தத்தில் சீனியின் அளவு அதி கரிக்காது. நீரிழிவு கட்டுப்பாட்டில் இருக்கும்.

இந்த செயற்கை இனிப்புகள் பாதுகாப்பானவையா என்பதுதான் பலரின் மனத்தை அரிக்கும் சந்தேகமாகும்.

சில காலத்திற்கு முன் வந்த சில ஆய்வுகள் சிகப்பு சமிக்ஞை காட்டின.

கர்ப்பமாயிருக்கும் பெண்களுக்கு இது ஆபத்தாக முடியலாம் என்றது ஒரு ஆய்வு. காலத்துக்கு முந்திய மகப்பேறு நிகழலாம் எனவும் அஞ்சப்பட்டது. சுண்டெலிகளில் செய்யப்பட்ட மற்றொரு ஆய்வானது அதிகளவில் செயற்கை இனிப்புகளை உண்பதால் சுண்டெலிகளில் புற்றுநோய் தோன்றுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்பதுடன் நீரிழிவு தோன்றுவதற்கான சாத்தியமும் அதிகம் என்றது. ஆயினும் இந்த ஆய்வுகள் மனிதர்களில் இதுவரை செய்து நிருபிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சந்தேகங்களைத் தெளிவிப்பதற்காக ஐரோப்பிய உணவு பாதுகாப்பு அதிகாரசபையானது (European Food Safety Authority) அத்தகைய இனிப்புகளின் பாதுகாப்புத்தன்மை பற்றிய ஒரு மீள் ஆய்வை ஆரம்பித்தது.

அதன் பலனாக சிகப்பு ஒளி மங்கத் தொடங்கியது.

மேற்படி மீள்ஆய்வு இன்னமும் தொடர்கிறது என்றபோதும் அஸ்பார்டேம் (aspartame) என்ற செயற்கை இனிப்புப் பற்றிய அறிக்கை 2015 ஜனவரியில் வெளியிடப்பட்டுள்ளது. 40 மிகி அளவைத் தாண்டாத அஸ்பார்டேம் இனிப்பை உட்கொள்வதால் ஆபத்துகள் ஏதும் இல்லை என அது முடிவு கூறியுள்ளது.

பிரான்சில் செய்யப்பட்ட மற்றொரு (Agency for Food, Environmental and Occupational Health & Safety) ஆய்வும் பச்சை விளக்குக் காட்டின.

செயற்கை இனிப்புகளை உட்கொள்வதால், இனிப்புச் சுவைக்கு பழக்கப்பட்டு அதனால் மேலும் மேலும் இனிப்புப் பண்டங்களை தேடி உண்ணும் பழக்கம் ஏற்படுவதும் இல்லை என்கிறது. அதாவது இனிப்பு சுவைக்கு அடிமையாவது (addiction) இல்லையாம். செயற்கை இனிப்புகளை குழந்தைப் பருவத்தில் உண்பவர்கள் வளரும்போதும் அதையே நாடுவார்கள் என்ற பரவலான கருத்துக்கு ஆதாரம் இல்லை என்று மேலும் சொல்கிறது.

எடையைக் குறைப்பதற்கு கலோரி வலுக் குறைந்த இத்தகைய செயற்கை இனிப்புகள் உதவும் எனப் பலரும் நம்புகிறார்கள். அதேநேரம் இவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கு எடை அதிகரிக்கும் என்கிறன சில ஆய்வுகள்.

பிரான்சில் செய்யப்பட்ட அந்த ஆய்வானது எடை அதிகரிப்பதற்கோ அல்லது எடை குறைப்பிற்கோ செயற்கை இனிப்புகள் காரணம் அல்ல என்கின்றது.


இந்தச் செயற்கை இனிப்புகள் குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரித்து அதன் காரணமாக உடலில் இன்சுலின் சுரப்பதையும் அதிகரிக்கும் என்றொரு நம்பிக்கை இருக்கிறது. அதன் காரணமாக நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தை செயற்கை இனிப்புகள் அதிகரிக்கின்றன என்கிறார்கள். ஆனால் அது தவறு என்கிறது பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வு. இந்தச் செயற்கை இனிப்புகள் நீரிழிவு ஏற்படுவதற்கு காரணமாக இருக்காது என்பது தெளிவாகிறது.

கர்ப்பிணிகள் இவற்றை பாவிப்பதால் கருப்பையில் வளரும் சிசு குறை மாதத்தில் பிறப்பதற்கு அல்லது வேறு ஆபத்துகளை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை.

(8ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# வாசகரை ஏமாற்றுவது

சமீபத்தில் ஒரு கூட்டத்தில் சிறுகதை எழுதுவது பற்றி பேச நேர்ந்தது. சிறுகதைக்கு வேண்டிய முக்கியமான அம்சங்களை அலசி விட்டு சிறுகதையை எப்படி முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்பதைப்பற்றி பேசியபோது விவாதம் நடந்தது. முடிவு அதிர்ச்சியாக இருக்கவேண்டும் என்பது ஒருவருடைய தீர்ப்பாக இருந்தது.

இரண்டு நாள் கழித்து இந்த வாசகர் தான் எழுதிய சிறுகதையை தந்து படிக்கச் சொன்னார். புதிதாக மணமுடித்த கணவன் மனைவிக்கு இடையில் தீராத சண்டை. ஒருநாள் மனைவி துப்பாக்கியை எடுத்து கணவனைச் சுட்டுவிடுகிறார். கணவனுடைய ஆயுள் முடிந்தது. கதையும் முடிந்தது.

'எதற்காக அப்பாவி கணவனைக் கொன்றீர்கள்?' என்று கேட்டேன். அவர் சொன்னார் அப்போதுதான் முடிவு அதிர்ச்சியாக இருக்கும். அதிர்ச்சியான முடிவை எல்லோராலும் எழுத முடியும். அது பொருத்தமான முடிவாக இருக்கவேண்டும். அதேசமயம் வாசகர் எதிர்பாராத ஒன்றாகவும் அமையவேண்டும்.

கதை தொடங்கியவுடனேயே வாசகர் ஆசிரியருடன் பயணம் செய்ய தொடங்கிவிடுகிறார். முடிவு நெருங்கும்போது எழுத்தாளர் எப்படி பலவிதமான முடிவுகளை யோசித்து ஒரு முடிவை தேர்ந்தெடுக்கிறாரோ அது போலவே வாசகரும் செய்கிறார்.

வாசகர் எழுத்தாளரை முந்த முடியாது. எழுத்தாளர் ஓர் அடி முன்னே நிற்கவேண்டும். கடைசி வரிதான் வாசகரிடம் விடைபெறும் நேரம். இந்த வசனத்தில் சொல்வதெல்லாம் சொல்லிவிடவேண்டும்.

இதுதான் கடைசி வாய்ப்பு. கதை இந்த வரியுடன் முழுமை பெறவேண்டும். இத்தனை நேரமும் சொல்லாத ஒரு விசயம் அங்கே வெளிப்படவேண்டும். வாசகர் எதிர்பாராத ஒன்றாக அது அமைந்துவிட்டால், அதுதான் எழுத்தின் சிறப்பு.

எட்டு வீதி நெடுஞ்சாலை. நாலு வீதி போவதற்கு, நாலு வீதி வருவதற்கு. வழக்கமாக வாகனங்கள் படுவேகமாக 120 கி.மீட்டர் வேகத்தில் கடக்கும். அன்று என்னமோ வாகனங்கள் வேகம் சிறிது சிறிதாகக் குறைந்து ஒரேயடியாக நின்றுவிட்டன. குறைந்தது 5 கி.மீட்டர் தூரத்துக்கு வாகனங்கள் நிற்பது கண்ணுக்கு தெரிந்தது. சார்லி சுற்றுமுற்றும் பார்த்தான். மற்றக் கார்க்காரர்களை சைகையால் என்னவென்று விசாரித்தான். ஒருவருக்கும் தெரியவில்லை.

திடீரென்று கார் ரேடியோவில் செய்தி ஒன்று வந்தது. அவர்கள் நாட்டு ஜனாதிபதியை தீவிரவாதிகள் கடத்திவிட்டனர். நெடுஞ்சாலையில் பயணிக்கும்போது அவருடைய காரை வழிமறித்து மடக்கிவிட்டார்கள் என்றது செய்தி. ஐந்து நிமிடங்கள் கழித்து அவர்கள் நிற்கும் நெடுஞ்சாலையில்தான் கடத்தல் நடந்திருக்கிறது என்று தெரிந்தது. அவனுடைய காருக்கு 100 கார்கள் முன்னால் ஜனாதிபதியை பிடித்து வைத்திருக்கிறார்கள்.

அந்த நாட்டுச் சரித்திரத்தில் அவன் ஒரு முக்கிய இடத்தில் இருந்தான். ஒரு கும்பல் ஒவ்வொரு காராகச் சென்று பேசிக்கொண்டு வந்தது. கடத்தல்காரர்கள் கேட்டது வெறும் ஒரு மில்லியன் டாலர்தான்.

அந்தக் காசு சேர்ந்ததும் ஜனாதிபதியை அப்படியே விட்டுவிட்டு போய்விடுவார்கள். அல்லாவிட்டால் தீவிரவாதிகள் அவரை அங்கேயே பெற்றோல் ஊற்றி கொளுத்திவிடுவார்கள்.

அந்த வீதி பரபரப்பானது. ஹெலிகொப்டர்கள் மேலே பறக்க ஆரம்பித்தன. கும்பல் ஒவ்வொரு காராக அணுகியது. அவனை அணுகி 'நீங்கள் எவ்வளவு கொடுப்பீர்கள்?' என்றது. அவன் சொன்னான், 'ஒரு லிட்டர் பெற்றோல்.'

இதுதான் சிறுகதை என்பது.

எதிர்பாராத முடிவு ஆனால் முன்னுக்கு விவரித்த கதையோடு ஒத்துப்போகிறது.

இது நான் எழுதிய கதை அல்ல. இன்னொருவர் எழுதியதை மொழிபெயர்த்து போட்டிருக்கிறேன்.


---

## குடும்ப நோயாளர் பராமரிப்புத் திட்டம் மேலும் விஸ்தரிப்பு

தங்கள் குடும்பத்தில் நோய் வாய்ப்பட்டிருக்கும் ஒருவரைப் பராமரிப்பதற்கு தொழில் நிலையத்தில் நீண்டகால விடுப்பு எடுக்கும் திட்டத்தை ஒன்ராறியா அரசு கடந்த மாதம் 29ம் திகதியிலிருந்து மேலும் விஸ்தரித்துள்ளது. ஒருவர் தமது வேலையை இழக்காது 'குடும்ப வைத்திய லீவு'த் திட்டத்தில் மேலும் சில சலுகைகள்பெற இத்திட்டம் வழிவகுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



‘சிந்தனைப் பூக்கள்’ எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

50

மனம் என்னும் சொல்லோடு பல வேறு சொற்கள் இணையும்போது புதிய புதிய கருத்துகளாக மாறிவிடும். உதாரணமாக பலம் என்ற சொல்லை மனத்துடன் இணைத்துவிட்டால் ‘மனோபலம்’என மாறிவிடுகிறது. இப்படி நூற்றுக்கணக்கான சொற்களை இதனுடன் இணைத்துப் பார்க்கும்போது எல்லையில்லாத மகிழ்வு ஏற்படும். இவ்வாறான சொற்களில் ‘மனப்பக்குவம்’ என்ற சொல்லும் பல கருத்துகளை உணர்த்துவதாக மாறிவிடுகிறது.

ஒரு இளம்பெண் பூப்பு அடைந்துவிட்டால் கிராமங்களில் ‘அவ பக்குவப்பட்டுவிட்டா’ என்று கூறுவர். இது ஆங்கிலத்தில் Puperty என்று கூறப்படும். ஆனால் இந்த பக்குவம் என்ற சொல்லை மனத்துடன் சேர்த்துவிட்டால் வரும் சொல் மனப்பக்குவமாகும். இங்கு ‘Maturity’ என்ற ஆங்கில கருத்து வருகிறது. இந்த மனப்பக்குவம் எல்லோருக்கும் இலகுவில் வந்துவிடாது. ஒருவரின் நிலை அறிந்து செயற்படும் தன்மை மனப்பக்குவம் உள்ளவர்களுக்கே ஏற்படுகிறது. கடுமையான சோதனையிலும் கலங்காமல் இருக்கும் மனப்பக்குவம் உள்ள மகான்கள், தலைவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் என பலர் உள்ளனர். சமாளிக்கத் தெரிந்த ஒருவரிடம் நல்ல மனப்பாங்கு (Proper manner) இருந்திருக்கும். முற்றறிவு (Mature wisdom) சிலரிடம் உள்ளது. அவர்களால் மட்டுமே நல்ல மனப்பக்குவத்தை அடைய முடியும்.

‘அவர் வேலைக்காரர்தான், இருந்தாலும் பக்குவமாக எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வார்’ என்ற வாக்கியத்தில் மனம் படும் பாடு பற்றிய பல விரிவான சிந்தனை (Divergent Thinking) உருவாகிறது. அதாவது கோபம் உள்ள ஒருவரைப் பற்றி பலருக்கு தெரிந்திருக்கிறது. குறிப்பாக அவரது காரியாலயத்தில் வேலை செய்பவர்களுக்கு தெரிந்திருக்கிறது. எடுபிடி வேலை செய்பவர் (peon) முதல் உயர்பதவி உள்ளவர்கள் கூட அங்கு இருக்கலாம் என்றாலும் முகாமையாளரிடம் செல்ல பயப்படுவர். இந்த சந்தர்ப்பத்தில் இரண்டு பக்கத்திலும் தேவைப்படுவது நல்ல மனப்பான்மைதான். கணவன், மனைவி, சகோதரங்கள், பிள்ளைகள், பெற்றோர், நண்பர்கள் என பலருடனும் பழகும் எம்மிடம் நல்ல மனப்பான்மை சிலவேளைகளில் காலை வாரி விடுகிறது. இதனால் ஏற்படும் இழப்பினை சமாளிக்க பல வருடங்கள் எடுக்கும்.

மனப்பக்குவம் ஏற்படுவதற்கு வேறு பல துணையான பாங்குகள் ஒருவருக்குத் தேவையாகும். அதாவது ஒருவரை காலையில் சந்திக்கும்போது நாம் ‘வணக்கம்’ என்று கூறுகிறோம். ஆனால் ஏனைய இனத்தின் காலை வணக்கம் Good morning எனவும் இரவில் படுக்கைக்கு செல்லும்போது நல்லிரவு good night என்றே குறிப்பிடுவர். இதனால் நாம் எப்போதும் வணக்கத்துக்கு பதிலாக ‘good morning’ என்ற கூற்றையே பாவிக்கிறோம். இந்த சொல்லாட்சியில் கூடிய அர்த்தம் புரிகிறது, நல்ல பண்பு தெரிகிறது, நல்ல மனப்பான்மை (good manner) தெரிகிறது. ‘காலை’ என்ற சொல்லை நாம் பாவிப்பதில்லை.

நல்ல மனப்பான்மைக்கு நல்ல செயலறிவு, இணக்கத்திறம், பொது அறிவு, அனுபவ அறிவு, சிடுசிடுப்பின்மை, இன்முகப் பண்பு, நகைமுகத்திறன் போன்ற பல அம்சங்கள் தேவைப்படுகிறது. யோகிகள், ஞானிகள் தங்களையெல்லாம் மனப்பக்குவம் உள்ளவர்களாகக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் அவர்களது செய்கைகள் வெறுப்பூட்டுபவையாக இருக்கும். நம்மிடையே நல்ல மனப்பான்மை உள்ள பலர் இருக்கிறார்கள். அவர்களை சந்திப்பது, அவர்களுடன் பேசுவது, அவர்களைப் பின்பற்றுவதுதான் எமது கடமையாகும்.

நல்ல மனப்பான்மையால் எல்லாம் வரும்.
மீண்டும் சந்திப்பேன்.

## நீரிழிவு நோயாளர்...

செயற்கை இனிப்புகள் நிணநீர் தொகுதியில் lymphoma எனப்படும் ஒரு வகைப் புற்று நோயை ஏற்படுத்தலாம் என முன்னர் ஒரு ஆய்வு கூறியது. ஆயினும் பிரான்ஸ் நாட்டின் மேற்கூறிய ஆய்வானது புற்றுநோயை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை எனச் சொல்கிறது. இருந்தபோதும் இது பற்றி மேலும் ஆய்வு செய்வது நல்லது என்கிறது அதே பிரான்ஸ் அறிக்கை.

செயற்கை இனிப்புகளை உட்கொள்ளவதால் குறிப்பிடக் கூடிய நன்மைகள் இல்லை என்பதும் அதே நேரம் அவற்றால் ஆபத்தான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்பு இல்லை என்பதே ஐரோப்பிய மற்றும் பிரான்ஸ் அதிகார சபைகளின் பொதுவான சிபார்சாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே இது தொடர்பாக இரண்டு முக்கிய விடயங்களைக் கூறலாம்.

1. எவரும் தயக்கமின்றிப் பாவிக்கக் கூடியளவு ஆரோக்கியமான உணவு என்று செயற்கை இனிப்புகளைச் சிபார்சு செய்வது இன்றைய நிலையில் முடியாது. ஏனெனில் அவற்றினால் ஆரோக்கியம் மேம்படும் என்று சொல்வதற்கு ஆதாரங்கள் இல்லை.

2. இருந்தபோதும் அதிகளவு மென்பானங்களை அல்லது பழச் சாறுகளை அருந்துபவர்கள் அவற்றைக் கைவிட்டு, பதிலாக வெறும் நீரை மட்டும் உட்கொள்ள முடியாத நிலையில் இருந்தால், அதற்கு மாற்றீடாக செயற்கை இனிப்புகள் அமையும். முக்கியமாக நீரிழிவாளர்களுக்கு இது கூடியளவு பொருத்தமாக இருக்கும். அவர்கள் சீனி அதிகம் உள்ள பானங்களை அருந்துவதைத் தவிர்த்து இத்தகைய செயற்கை இனிப்புகளை தமது உணவிலும் நீராகாரங்களிலும் சேர்த்துக் கொள்வதில் தவறு இல்லை.

நீரிழிவு நோயற்ற ஏனையவர்கள் இவற்றை உபயோகிப்பதில் எந்தவித நன்மையும் இருப்பதாக இதுவரை அறியப்படவில்லை.

எனவே அதிகளவு சீனி சேர்த்துக் கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. அதேநேரம் செயற்கை இனிப்புகளை மாற்றீடு செய்வதில் எந்த நன்மையும் இருப்பதாகவும் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# பெரியவர்களைச் சிறுவர்களாக்கிய சின்ட்ரெல்லா திரைப்படம்

சின்ட்ரெல்லா என்ற Fairy Tale ஐ (வனதெய்வக் கதை) அறியாதவர்கள் இருக்க முடியாது. ஆண்டாண்டு காலமாக உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் இக்கதையை பாடசாலையிலோ அல்லது வாய்மொழி மூலமாகவோ அறிந்திருப்பர். பெரும்பான்மையான இதுபோன்ற கதைகள் எல்லாம், முன்னொரு காலத்தில் (Once upon a time) என்று ஆரம்பித்து நல்ல சந்தோஷமாக பின்பு வாழ்ந்தார்கள் (They lived happily ever after) என்று முடியும். சின்ட்ரெல்லா கதையும் இதற்கு விதிவிலக்கல்ல.

எலா என்ற பெண்ணை அவளின் மாற்றாந்தாய் மிகவும் கொடுமைப்படுத்துகிறாள். குளிர் நிறைந்த அறையில் அவளை வசிக்க விடுகிறாள் அந்தச் சிற்றன்னை. குளிருக்காக வெப்பம் வரும் புகைபோக்கிக்கு அண்மையில் எலா நித்திரை கொள்வதால் அவளின் முகமெல்லாம் புகைக்கரி படிவதால் சிற்றன்னையின் இரண்டு புதல்விகளும் இவளை Cinder + Ella என்ற பட்டப் பெயரால் அழைக்கிறார்கள். Cinder என்றால் சாம்பல் என்பது கருத்து. ஒருநாள் காட்டில் சின்ட்ரெல்லாவை அந்நாட்டு இளவரசன் எதேச்சையாகச் சந்திக்கிறான். அவளிடம் தன் மனதைப் பறி கொடுக்கிறான். அவளை அடைவதற்காக அந்நாட்டிலுள்ள தகுதி வாய்ந்த இளம் பெண்களை இரவு நடன விருந்துக்கு அழைக்கிறான். சின்ட்ரெல்லாவை அங்கு அழைத்துச் செல்ல சிற்றன்னை மறுக்கிறாள். ஆனால் வனதேவதை (Fairy God mother) எல்லா ஒழுங்குகளையும் செய்து சின்ட்ரெல்லாவை அனுப்பி வைக்கிறாள். ஆனால் ஒரு நிபந்தனை – இரவு பன்னிரண்டு மணிக்கு முன்னர் வீடு திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் அவளின் வேஷம் கலைந்து சுயரூபம் எல்லோருக்கும் தெரிந்துவிடும்.

விருந்து வைபவத்தில் இளவரசனோடு நடனம் ஆடிக் கொண்டிருக்கும் பொழுது பன்னிரண்டு மணி அடிக்கும் ஒலி கேட்டு அவள் அடித்துப் புடைத்து வீட்டுக்கு ஓடி வருகிறாள். அப்படி ஓடி வரும்பொழுது அவளின் ஒரு கால் சப்பாத்து கழன்று விழுகிறது. இளவரசன் அந்தச் சப்பாத்தை வைத்து சின்ட்ரெல்லாவைக் கண்டுபிடித்து கரம் பற்றி இனிதே வாழ்கிறான் என்பதுதான் இதன் கதை.

இந்தக் கதையை சாள்ஸ் பெரோல்ற் (Charles Perrault) என்பவர் 1697 இல் பிரெஞ்சு மொழியில் எழுதினார். எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்னர் பல வருடங்கள் இக்கதை கர்ணபரம்பரையாக இருந்ததாம். கிட்டத்தட்ட 38 முறை பல பெயர்களில் இக்கதை படமாக்கப்பட்டது. பெரும்பாலும் இவை கார்ட்டூன் வடிவத்திலேயே வெளியிடப்பட்டன. 1950ல் டிஸ்னி (Disney) படத்தயாரிப்பாளர்கள் மிகச் சிறப்பான வகையில் இதனைக் கார்ட்டூன் படமாக்கினர். அதே தயாரிப்பாளர்கள் 65 வருடங்களுக்குப் பின்பு திரும்பவும் இதனைப் படமாக்க உத்தேசித்தனர்.

மிகவும் கணினி யுகத்தில் (Digital Era) நடிகர்களை வைத்து (life actors) பலகோடி டாலர்களைச் செலவு செய்து ஏன் இத்தகைய நடிகர்களைக் கொண்டு இதனைத் தயாரித்தனர் என்ற வினாவுக்கு விடை தேட வேண்டி உள்ளது. இங்குதான் எனது தலையங்கமாகிய 'பெரியவர்களை சிறியவர்களாக மாற்றிய திரைப்படம்' என்பதற்கான விளக்கத்தைக் கூற வேண்டும். கார்ட்டூன் படங்கள் பொதுவாக குழந்தைகளுக்காகவே தயாரிக்கப்பட்டன. ஆனால் இந்தத் திரைப்படம் குழந்தைகள், பதின்ம வயதினர், வளர்ந்தோர், முதியோர் என எல்லா வயதினரையும் மனதிற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி டிஷ்னி ஸ்தாபனத்தார் பெரும் வெற்றியையும் அடைந்துள்ளனர்.

வளர்ந்தவர்கள் எல்லோரினதும் இதயத்தின் ஒரு மூலையில் ஒருவகைக் குழந்தைத் தன்மை காணப்படுகிறது. அது தக்க தருணம் வரும்போது வெளிப்படத் தவறாது. எத்தனை பேரன்மார் குதிரைகளாக மாறி தவழுவதையும், பேரக் குழந்தைகள் அவர்களின் முதுகில் சவாரி செய்வதையும் பார்க்கிறோம். எத்தனை பேத்திமார்கள் காகம், குருவிகளாக மாறி விதம்விதமாக ஒலி எழுப்பி பேரக் குழந்தைகளுக்கு உணவு ஊட்டுகிறார்கள். திரையரங்கில் மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் கணிசமான அளவு முதியோர்களும் காணப்பட்டனர். அவர்கள் திரைப்படத்தினை மிகவும் அனுபவித்துப் பார்ப்பதைக் காணும்போது டிஷ்னி தயாரிப்பாளர்கள் தங்கள் முயறிசியில் வெற்றி அடைந்துள்ளனர் என்று புலனாகிறது.

இந்தப் படத்தின் முக்கிய பாத்திரமான லில்லி ஜேம்ஸ் அணிந்திருந்த நீல நிற நடன விருந்து ஆடை தயாரிப்பதில் பெரும் கவனம் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உடையில் சின்ட்ரெல்லா காற்றில் மிதக்கும் ஓர் ஓவியம்போல் காட்சியளிக்க வேண்டுமென தயாரிப்பாளர்கள் நிபந்தனை விதித்தனர். 270 யார் துணியில் பத்தாயிரம் இரத்தினக் கற்கள் வைத்து பதினெட்டு தையற்காரர்கள் 500 மணித்தியாலங்கள் வேலை செய்து இந்த உடை தயாரிக்கப்பட்டதாம்.


சின்ட்ரெல்லாவின் காலணிகள் இல்லாவிட்டால் கதையே இல்லை. இந்தக் காலணிகள் மிகவும் மென்மையாகவும் (Elegant), கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும். இளவரசனும் அவனது ஊழியர்களும் வீடு வீடாகச் சென்று அந்தக் காலணிக்குச் சொந்தமான பாதத்தைத் தேடுகிறார்கள். எத்தனை கவர்ச்சி மிக்க காலணியாக பார்ப்போர் மனதை அது கவர்கிறது. இதனை ஆஸ்ரியா தேசத்தின் கண்ணாடியில் எட்டு முறை செய்தார்களாம். ஆனால் அதனை சின்ட்ரெல்லாவால் அணிந்து நடக்க முடியவில்லை. பின்னர் தோல் சப்பாத்தை கணினி மூலம் மாற்றம் செய்து (Digitally altered) படத்தைத் தயாரித்தனர்.

நாம் குழந்தைகளாக இருந்தவேளையில் எவர் எதனைக் கூறினாலும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்வோம். இன்றைய குழந்தைகள் அப்படியில்லை. இரவு பன்னிரண்டு மணிக்கு பழைய கோலம் வந்துவிடுமென்றால், சப்பாத்து மாத்திரம் ஏன் மாறவில்லை என்று கேட்கிறார்கள். இதற்கு விடை தெரியவில்லை.
முதல் நாளே 70 மில்லியன் டாலர் வசூலைத் தந்த இத்திரைப்படம், வனதெய்வம் கதைகளைப்போல பல ஆண்டு காலம் வாழும். (Will live forever). முடிவு மாத்திரமல்லாது முழுக்கதையும் எல்லோருக்கும் ஏற்கனவே தெரிந்தது. அப்படிப்பட்ட கதையை படமாகத் தயாரிப்பது அவ்வளவு சுலபமானதல்ல. ஆனாலும், 'அடுத்து என்ன வரப்போகிறது' என்ற எதிர்பார்ப்பை பார்வையாளரின் மனதில் ஏற்படுத்தும் சின்ட்ரெல்லா திரைப்படம் சிரஞ்சீவியாக வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*



# சாயங்கால சந்தோஷம்

தமிழ் ஆண் முதியவர்களை அனேகமாக சிறு சிறு குழுக்களாக ஒவ்வொரு மாலை வேளைகளிலும் ரொறன்ரோ மாநகரப் பகுதியில் எங்கு காணலாம் என்பதற்கு பதில் தெரிந்திருந்தாலும் அவர்கள் அங்கு என்ன கதைக்கின்றார்கள் என்பதற்கு பதில் தெரிவதில்லை.

தினம்தோறும் கதைப்பதற்கு புதிது புதிதாய் ஏதாவது இருக்கும் அவர்கள் வெள்ளை மனம் கொண்ட பிள்ளைகள். பேதமும் போதமும் மங்கினாலும் சாவிலிருந்து தப்பலாம் என முன்னரே முடிவெடுத்திருப்பார்களோ என எண்ண வைக்கும் தொய்யாத தோழர்கள். மனித சஞ்சாரம் மிகுதியாய் இருக்கும் கடைத் தொகுதிகள்தான் (shopping mall) அவர்களுக்கு இமைப் பொழுதும் நீங்காத சாயங் கால சந்தோஷம். அனேகமாக அங்குள்ள சாப்பாட்டு இடங்கள் (food court) மாலை நேரங்களில் அவர்களுக்கு சரிப்பட்டு வருமெனினும் அவர்கள் அங்கு வாய் நனைப்பதும் வாடி நிற்பதும் குறைவு. ஒரு மேசைக்கு நால்வர் வீதம் நான்கு அல்லது ஐந்து மேசைகள் அவர்களால் ஆக்கிரமிக்கப்படும். மாலை நான்கு மணி முதல் எட்டு மணி வரை அந்தப்பகுதிதான் அவர்களுக்கு உலகில் மிகமிக விருப்பமான பகுதி.

பலர் அங்கு ஓய்வூதியம் பெறாது இங்கு பெறுபவர்கள். சிலர் அங்கும் இங்கும் பெறுபவர்கள். அவர்கள் அங்கு கூடுவதே பாக்கியம் என கருதுவதால் கருத்துரிமைச் சுதந்திரத்தை பரிபூரணமாக அனுபவிக்கக் கூடிய ஏதாவதொரு வாக்கியம் எல்லோரிடமுமிருந்தது. ஊர் உறவு அரசியல் தமிழ் வானொலிகள் பத்திரிகைகள் என பலதும் பத்தும் கதைத்தார்கள்.

அரைகுறையாக அங்கங்கள் தெரிய அவர்களைத் தாண்டி அசைந்து சென்ற கறுப்பின பெண் ஒருத்தி மீது இன்னமும் வாலிப சிந்தனை குன்றாத அங்கிருந்த ஒருசிலரது பார்வை மொய்த்திட அவர்களது பேச்சு இச்சை மீது திரும்பியது கடந்த வாரம் ஒரு முறை அவர்களைக் கடக்க நேர்ந்ததில் என் காதில் விழுந்தது. அந்த நிமிடத்து மனநிலை சுவாரசியமூட்டியதில் அங்கு அமரவைத்தது.

இச்சை என்றால் தோன்றும் ஆசை பிரியம் பற்று காதல் அன்பு போன்றன மனம் சம்பந்தப்பட்டது. ஆனால் உடலுக்கும் இச்சை உண்டு. அவை எண்ணிக்கையில் பதினான்கு. ஏப்பம் அபானவாயு மலம் சலம் தாகம் பசி கொட்டாவி வாந்தி கண்ணீர் தும்மல் இருமல் மூச்சுவாங்கல் விந்தணுவெளியேறல் தூக்கம் என்பனவாகும்.

இச்சைகள் இயல்பான அளவில் இருக்கும் வரை உடல் நன்றாக உள்ளது என்று அர்த்தம். இவற்றில் ஏதாவது கூடினாலோ குறைந்தாலோ பிரச்சினை தான். உடல் இச்சைகள் வருவதும் அவற்றைத் தீர்த்துக் கொள்வதும் இயல்பாக நிகழவேண்டும். வற்புறுத்தி வரவழைத்தலோ நாகரிகம் கருதியோ அல்லது அடுத்தவர் என்ன நினைப்பார் எனக் கூச்சப்பட்டோ இந்த இச்சைகளில் எதனையும் கன நேரத்துக்கு அடக்குவது கூடாது. ஏகப்பட்ட நோய்களில் கொண்டு போய் விட்டு விடும். ஏதோ ஒரு நாள் ஒரு சமயம் அடக்குவது எனின் பிரச்சினையில்லை.

இந்த இச்சைகளில் முக்கியமானவை நான்கு. ஏப்பம் ஆபான வாயு மலம் சிறு நீர். இவை உடலின் செரிமானத்துடனும் கழிவுகளை நீக்கும் செயற்பாட்டுடனும் தொடர்புடையவை.

ஏப்பத்தை அடக்கினால் செரிமானக் கோளாறுகள் வரும். அபான வாயுவை இயல்பாக வெளியேற விடாமல் அடக்குவது மலச்சிக்கலை உருவாக்கும். இது தொடர்ந்தால் மூல நோய்க்கு மூலமாகும். நீடித்தால் நெஞ்சு எரிச்சலும் இருதய நோயும் உபாதை தரும். மலத்தை அடக்குவதால் தலைவலி வயிற்று வலி கெண்டைக்கால் தசைவலி மூலம் எனத் தொடரும். சிறுநீரை அடக்கினால் சிறுநீர் 'வாய்காலில்' கல் உருவாகி உயிர் போகிற அளவு வலி வாட்டும். இறுதியில் சிறுநீரகம் பாதிப்புறும்.

தாகம் ஏற்படும்பொழுது கண்டிப்பாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். தலைச் சுற்றல் மயக்கம் உடல் சோர்வு போன்ற தொந்தரவுகளை இதனால் தடுக்கலாம். பசியைப் புறக்கணித்தால் வாயுக்கோளாறு வயிறு உப்புசம் குடற்புண்கள் என ஏகப்பட்ட தொல்லைகளுக்கு வழிவகுக்கும். சோம்பேறி என நினைத்துவிடுவார்களோ எனப்பயந்து கொட்டாவியை அடக்குவது இருதய நோய் வருவதற்கு உற்சாகமாகிவிடும். உடலுக்கு ஒவ்வாத பொருட்களை உண்டுவிட்டால் வருவது வாந்தி. இதை அடக்குவதால் காய்ச்சல் வரும் உடம்பு வீங்குவது வரும். தோல் நோய்கள் வரும். கண்ணீரைக் கட்டுப்படுத்துபவர்களைப் பார்த்து கண்வலி கண்சிமிட்டும். மூக்கு ஒழுகும். தலைவலி கழுத்து வலி சைனஸ் நெஞ்சு வலி போன்றன பீடிப்பது தும்மலை இருமலை மூச்சுவாங்கலை அடக்குவதால். ஆண்மையை நிரூபிப்பதாக நினைத்து விந்தணுவை வெளியேற தாமதமாக்குபவர்கள் பிறப்புறுப்பில் வலியாலும் ஆண்மை-யிழப்பாலும் சிறுநீரகக் கோளாறாலும் பின்னர் சோர்வடைவர். தூக்கத்தைத் தொலைப்பது அசதியாலும் உடம்பு வலியாலும் துக்கப்படுவர்.


உடல் இச்சைகளைக் கட்டுப்படுத்தக் கூடாது என்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மன இச்சைகள் சிலவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது. காமம் குரோதம் பேராசை பொறாமை கர்வம் வெறுப்பு போன்ற பொல்லாத இச்சைகள் அவை.

அவர்களது சாயங்கால சந்தோஷம் வெறுமனே சாயும்கால சந்தோஷம் அல்ல. வீட்டுக்குள்ளிருக்கின்ற கூட்டுக்குள் குறுகிக் கொள்ளாத குதூகலம் நிறைந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா விவேகானந்தன்



# ஆசிரியர் என்பவர் யார்? 03

குறும்புத்தனம் மிக்க மாணவரைக் கொண்ட ஒரு வகுப்பறை அது. கற்பிக்க வருவோர் மாணவரது தொல்லைகளால் ஓடிவிடுவதுண்டு.

அன்றும் ஒரு புது ஆசிரியர் வருகின்றார். தொல்லை தொடர்கின்றது. ஆசிரியர் மாணவர்களைப் புரிந்து கொள்கிறார். புத்தகங்களை மூடச் சொல்லிவிட்டு மாணவரை வெளியே அழைத்து போகின்றார். மாணவருக்கு இது புதுமையாக இருக்கின்றது. வெளியே ஓர் உழவனாக மாறிக் கலகலப்பூட்டி அவர்களை ஈர்க்கின்றார். வகுப்பறையில் வரலாற்றுப் பாடம் நடத்துகின்றவேளை, கதாபாத்திரங்களாகத் தன்னை மாற்றிக்கொண்டு கலகலப்பூட்டிக் கற்பிக்கின்றார்.

ஒருநாள் மார்க் அன்ரனி கதாபாத்திரத்தில் ஆசிரியர் நடித்துக்கொண்டிருக்க வகுப்பறை கலகலப்பின் உச்சத்தில் இருக்கின்றது. இக்காட்சியைப் பாடசாலை அதிபர் கண்டு விடுகின்றார். ஆசிரியரைக் கோமாளியாகக் கண்ட அவருக்குக் கோபம் வருகின்றது. ஆசிரியர் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றார்.

தேர்வு முடிவுகள் வருகின்றன. குறிப்பிட்ட ஆசிரியர் கற்பித்த எல்லாப் பாடங்களிலும் மாணவர் அதிக புள்ளிகள் பெறுகின்றனர். ஆழமாக யோசித்த அதிபர் மாணவர்களோடு சென்று ஆசிரியரை மீண்டும் அழைத்து வருகின்றார்.

என்னை மிகக் கவர்ந்த ஒரு குறும்படம். ஆசிரியர் – மாணவருக்கிடையே உறவு எப்படியிருக்க வேண்டும் என்ற சமகால ஆய்வுகளின் முடிவை பெரிதும் ஒத்துப் போகின்றது இக்குறும் படத்தின் கருப்பொருள். (YouTube இல் https://www.youtube.com/watch?v=bBi1o4x2lqI என்ற முகவரியில் இப்படத்தைக் காணலாம்.)

ஓர் ஆசிரியர் யார்? என்பதற்கான வரைவிலக்கணங்கள் கடந்த நூற்றாண்டுவரை பெரிய மாறுதல்களைக் கொண்டிருக்கவில்லை. ஆசிரியர் தனக்குத் தெரிந்தவற்றை மிகுந்த கண்டிப்போடு கற்பிப்பதுவும் மாணவர் மிகுந்த பயபக்தியோடு அவற்றைப் பயில்வதுவுமே வழக்கமாக நடைமுறையில் இருந்து வந்தது.

இப்போதும் கல்வி நிலையில் பின்தங்கியிருக்கும் நாடுகளில் இம்முறையைக் கண்டுகொள்ளலாம்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்வியியல் பெருவளர்ச்சி கண்டு வருகின்றது. பல்கலைக்கழகங்களும் கல்வி நிறுவனங்களும் பெரும் செலவில் ஆய்வுகளை மேற்கொணடு வருகின்றன. இந்த ஆய்வுகளின் முடிவுகள் மரபுவழிக் கல்வி முறைகளில் இருந்து பெரிதும் மாறுபட்ட கல்விக்கொள்கைகளை உருவாக்கி வருகின்றன. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் ஓர் ஆசிரியர் பற்றிய வரைவிலக்கணமும் அவரது பணிகளும் கல்வியியலில் ஒரு புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்துள்ளன.

## ஆசிரியரைப் பற்றிய சில புதிய கோட்பாடுகள்:

"ஆசிரியர் என்பவர் வளங்களை வழங்குபவராகவும் வழிகாட்டுபவராகவும் நெறிப்படுத்துபவராகவும் இருப்பார். தமது தேவைகளிலிருந்தும் சிந்தனைகளிலிருந்துமே மாணவர் கற்றுக்கொள்வர்."

– மாணவர் மையக் கல்விக் கொள்கை

"மாணவரது செய்கைகளிலிருந்தும் சிந்தனைகளிலிருந்துமே கற்றலின் பெறுபேறுகள் பெறப்படுகின்றன. மாணவரது கற்றலுக்கான செய்கைகளிலும் சிந்தனைகளிலும் ஆதிக்கம் செலுத்துவதே ஆசிரியரது பணி"

- Herbrt Simon

"கடந்த காலங்களில் எம் முன்னோர் என்ன செய்தனர் என்பதைக் கூறும்படியாக மாணவரை உருவாக்குவதல்ல பாடசாலைகளின் பணி. புதிதாக என்ன செய்ய செய்ய வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுப்பதே கற்பித்தலின் முதன்மை இலக்காக இருத்தல் வேண்டும்."

- Jean Piaget

மாணவரது முன்னறிவு, ஆற்றல், விருப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே சமகால கற்பித்தற் கொள்கைகள் வரையறுக்கப்படுகின்றன. ஆசியர் தனக்குத் தெரிந்த யாவற்றையும் மாணவருக்குக் கற்பிக்கும் முறைமை அடியோடு மாறிவிட்டது.

இந்த மாற்றங்கள் கற்பித்தலில் ஆசிரியரது பங்களிப்பைச் சிறிதும் குறைத்துவிடவில்லை. கற்பித்தற் சூழலில் அவரது பணிகள் மகத்தானவையாகவே இருக்கின்றன. மாற்றங்கள் அவரது பணிகளைப் புதிதாக வடிவமைத்திருக்கின்றன. ஆசிரியரின்றி எந்த வகுப்பறையும் இயங்க முடியாது.


மாணவர் மையக் கல்விமுறை (student centered learning)
வேறுபாடுடைக் கல்விமுறை (differentiate instruction)
பன்முக நுண்ணறிவுக் கோட்பாடு (Theory of multiple intelligences)

போன்ற பல கல்வியியல் கோட்பாடுகள் வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாற்றம் பெற்றுவரும் கல்விச் செயற்பாடுகளில் ஆசிரியரின் பணி எத்தகையது என்பதை அடுத்து நோக்குவோம்.

*'The mediocre teacher tells. The good teacher explains. The superior teacher demonstrates. The great teacher inspires." - William Arthur Ward.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குரு அரவிந்தன்

# சுதந்திரச்சிலை

13

அமெரிக்காவில் நியூயோர்க்கில் உள்ள ஹட்சன் துறைமுகத்தின் வாசலில் உள்ள லிபேர்ட்டி தீவில் உலகப் புகழ் பெற்ற லிபேர்ட்டி சிலை அமைந்திருக்கின்றது. இந்தத் தீவு சுமார் பத்து ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. 1875 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இங்கே இந்தச் சிலை அமைக்கும் வேலைகள் தொடக்கப்பட்டன. 1886 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பணி நிறைவேறியது. இந்தச் சுதந்திரதேவியின் சிலை 305 அடி உயரம் கொண்டது. செம்பு இரும்பு உருக்கு ஆகியவற்றின் கலவையில் உருவாக்கப் பட்டது. பிரான்ஸ் நாட்டுச் சிற்பியான அகஸ்டி பார்த்தோல்ட்டி என்பவரால் உருவாக்கப்பட்டு பிரான்ஸ் நாட்டு மக்களின் அன்பளிப்பாக அமெரிக்கா சுதந்திரமடைந்து நூறாண்டுகள் நினைவாக அமெரிக்காவுக்குக் கொடுக்கப்பட்டது. உரோமானியப் பெண் தெய்வமான லிபார்டாஸின் உருவ அமைப்பை கொண்டே இந்தச் சிலை அமைக்கப்பட்டுக் கப்பல் மூலம் அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்டது.



இந்த சுதந்திரதேவியின் வலது கையில் தீபம் இருக்கின்றது. வலதுகை 42 அடி நீளமானது. இடது கையில் உள்ள புத்தகத்தில் யூலை 4 ஆம் திகதி 1776 என்று உரோம எழுத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. இந்தப் புத்தகம் 23 அடி 7 அங்குல உயரமும் 13 அடி 7 அங்குல அகலமும் கொண்டது. பாதத்தில் இருந்து தலைவரை 111 அடி உயரமானது. 35 அடி சுற்றளவு உள்ள இடுப்பைக் கொண்ட சுதந்திரதேவியின் தலையில் ஏழு முனைகளைக் கொண்ட கிரீடம் இருக்கின்றது. இந்த ஏழு முனைகள் ஏழு கண்டங்களையும், ஏழு கடல்களையும் குறிப்பதாகவும் சொல்கிறார்கள். 1876 ஆம் ஆண்டு செய்யப்பட்ட சுதந்திர தேவியின் வலது கையில் இருக்கும் தீபம் 1984 ஆம் ஆண்டு சிறந்த வடிவமைப்போடு மாற்றி அமைக்கப்பட்டது. சுதந்திரதேவி விடுதலை பெற்ற பெண் என்பதை அடையாளப்படுத்துவதற்காக உடைத்தெறியப்பட்ட விலங்கும் சங்கிலியும் காலடியில் கிடப்பது போலச் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் அமெரிக்க மக்கள் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள் என்பதை இந்தச் சிலை சொல்லி நிற்கின்றது.

சிலையின் மொத்த எடை 205 தொன்களாகும். 154 அடி உயரமான பீடத்தில் 151 அடி உயரமான சிலை வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. மொத்த உயரம் 305 அடிகளாகும். 214 பெட்டிகளில் 300 துண்டுகளாக பிரான்ஸில் இருந்து 'ஸ்ஈறி' என்ற கப்பலில் 1885 ஆம் ஆண்டு யூன் மாதம் கொண்டு வரப்பட்டு இங்கே பொருத்தப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் 354 படிக்கட்டுகள் ஏறிச் சென்றால் சுதந்திரதேவியின் முடியைத் தொட முடியும். மூடியில் மட்டும் 25 யன்னல்கள் இருக்கின்றன. 1902 ஆம் ஆண்டுவரை கலங்கரை விளக்கமாகவும் இந்தச் சிலை பாவிக்கப்பட்டது. சுதந்திரதேவியின் 130வது பிறந்த தினத்தை அடுத்த வருடம் 2016 ஒக்டோபர் மாதம் அமெரிக்கர்கள் மிகவும் பிரமாண்டமாகக் கொண்டாட இருக்கிறார்கள்.

மான்ஹாட்டன் தீவிலிருந்து லிபேர்ட்டி தீவுக்குச் சென்றுவரப் படகுப் போக்குவரத்து உள்ளது. அதேபோல நியூஜேசியில் இருந்தும் படகு மூலம் செல்ல முடியும். படகுப் பயணத்துக்குப் பணம் செலுத்த வேண்டும். படகு மூலம் மான்ஹாட்டன் தீவிலிருந்து கடல்வழியாகச் செல்பவர்கள் தூரத்திலிருந்து பார்க்கும்போதே மிகவும் கம்பீரத் தோற்றமுடைய சுதந்திரதேவியின் சிலையைக் காணமுடிகின்றது.

அருகே செல்லச் செல்லச் சிலையின் பிரமாண்டமான உருவ அமைப்பு வெளிப்படுகின்றது. பாதுகாப்புக் காரணமாக, தனியாருக்குச் சொந்தமான படகுகள் இங்கே வந்து தரித்து நிற்பதற்கு அனுமதி இல்லை. விமான நிலையத்தில் பயணிகளைச் சோதிப்பதுபோல இங்கேயும் படகில் ஏறுமுன் ஒருதடவையும், தீவில் இறங்கியதும் ஒரு தடவையும் சோதிக்கிறார்கள். பீடத்திற்கு மேலே சிலையின் பகுதிகளை ஏறிப்பார்ப்பதற்கு தனியாகப் பணம் செலுத்த வேண்டும்.

1984 ஆம் ஆண்டு ஐ.நா. கலாசாரப் பிரிவின் நிர்வாகத்தின் பராமரிப்பில் இந்தத் தீவு கொண்டு வரப்பட்டது. ஈபெல் கோபுரத்தை உருவாக்கிய கெஸ்ரவ் ஈபெல் அவர்களுக்கும் சுதந்திரதேவியின் சிலையை உருவாக்கியதில் பங்கு உண்டு. 1878 ஆம் ஆண்டு இந்த சுதந்திரதேவியின் தலையை மட்டும் பாரிஸில் நடந்த உலக கண்காட்சியில் பார்வைக்கு வைத்திருந்தார்கள். இந்த சுதந்திரதேவியின் சிலையைக் கண்டு களிப்பதற்காக லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருடம் தோறும் நியூயோர்க் வந்து செல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம் 13

## வாருங்கள் வர்ணம் தீட்டுவோம்

சிறு வயதில் வர்ணம் தீட்டும் புத்தகங்களைப் (colouring book) பயன்படுத்திய ஞாபகங்கள் எமக்கு இருக்கும். கறுப்பு வெள்ளையாக இருக்கும் படங்களின் வெளிப்புற வரிகளுக்குள்ளே எமக்குப் பிடித்த வர்ணங்களைத் தீட்டி நாங்களே கை தட்டி மகிழ்ந்து கொள்வோம். சிலவேளைகளில் வர்ணம் தீட்டும் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசில்களையும் பெற்றிருப்போம்.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் சலிக்காமல் குழந்தைகளுக்கு ஏராளமான வர்ணம் தீட்டும் புத்தகங்களை வழங்கி அவர்களின் சிந்தனை மேம்பாட்டுக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் களம் அமைத்து வருகின்றார்கள். ஆனால், இந்த வர்ணம் தீட்டும் புத்தகங்களைப் பெரியவர்களும் கொள்வனவு செய்து வர்ணம் தீட்டி அழகு பார்ப்பது தற்போதைய திருப்பமாக (latest trend) இருக்கின்றது. 'என்னடா இது சின்னப் புள்ளத்தனமாகவல்லவோ இருக்கு' என்பதை விட எங்கள் நிலமை அந்தளவுக்கு மோசமாக உள்ளது என்பதே உண்மை. இந்த நூற்றாண்டின் மிக முக்கியமான நோயாகக் கருதப்படும் மனஅழுத்தத்தைக் குறைக்கும் சிகிச்சையாக வர்ணம் தீட்டும் புத்தகங்களின் பாவனை பெரிதும் பயன்படுவதாக அண்மைக் காலத் தரவுகள் தெரிவிக்கின்றன.

கனடாவிலும், அமெரிக்காவிலும் Amazon இணையத்தளம் மூலம் விற்றுத் தீர்க்கப்பட்ட புத்தகங்களில் பெரியவர்களின் வர்ணம் தீட்டும் புத்தகங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. திடீரென அதிகரித்துள்ள இந்த வர்ணம் தீட்டும் புத்தகங்களின் விற்பனைக்கும், மனஅழுத்தத்துக்கும் இடையே நேரடியான தொடர்புநிலை இல்லாத போதும், மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்போர் இந்தப் புத்தகங்களைப் பெரிதும் பாவித்து மனஅழுத்தத்தை தாமாகவே குறைத்து வருவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

Scottish illustrator Johanna Basford இனால் வடிவமைக்கப்பட்ட "Secret Garden and Enchanted Forest" என்ற வர்ணம் தீட்டும் புத்தகம் Amazon's best-seller list இல் தற்பொழுது முன்னணியில் இருக்கின்றது. அத்துடன் தற்சமயம் வாசகர்களிடையே மிகவும் பிரபல்யமாக இருக்கும் "The Girl on the Train" and "All the Light We Cannot See" போன்ற புத்தகங்களையெல்லாம் பின்தள்ளி இந்த வர்ணம் தீட்டும் புத்தகம் பாரிய அளவில் விற்பனையாகி வருகின்றது.

கடந்து சென்ற குழந்தைப் பருவத்தின் உணர்வுகளைப் பிரதிபலித்து புதிய மெருகுடன் பெரியவர்களுக்கு ஏற்றபடி முதன்முதலாக "Secret Garden" என்ற புத்தகம் 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. உலகம் முழுவதும் 1.4 மில்லியன் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டன. இதனுடன் அண்மையில் வெளியிடப்பட்ட "Enchanted Forest" என்ற புத்தகம் ஏற்கனவே 225 ஆயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு, மேலும் விற்பனையின் அளவு அதிகரித்து வருகின்றது. அத்துடன் An Anti-Stress Coloring Book, Color Me Calm, 100 Coloring Templates For Meditation and Relaxation and Creative Therapy போன்ற பல தலைப்புகளில் மேலும் பலவகையான புத்தகங்கள் விற்பனையில் உள்ளன.

வர்ணம் தீட்டும் புத்தகங்களின் கிராக்கி அதிகரித்துள்ள இந்த நிலையில் இதற்கென சிலர் வர்ணம் தீட்டும் குழுக்களை (coloring clubs) உருவாக்கியுள்ளார்கள். இந்தக் குழுக்களின் அங்கத்தவர்கள் தமது உறுப்பினர்களைச் சந்தித்து வர்ணம் தீட்டிய பக்கங்களைப் பகிர்ந்து கொண்டு மனஅழுத்தத்தை இயற்கை முறையில் குறைத்து வருகின்றார்கள்.

பெரியவர்களின் வர்ணம் தீட்டும் புத்தகங்களில் அதிகளவில் பூந்தோட்டங்கள், காடுகள், களனிகள், இயற்கைக் காட்சிகள், கடல் மற்றும் கடலுக்குள்ளேயான உலகம் போன்ற பல நுணுக்கமான ஓவியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மனிதனின் கற்பனை வளத்தை அதிகரிக்கும் வகையில் சிறு சிறு வேலைப்பாடுகள் அடங்கிய காட்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுக்குரிய வித்தியாசமான வர்ணங்களைத் தெரிவு செய்து மெருகேற்றும்போது மனஅழுத்தத்தில் உள்ளவர்கள் தம்மை மறந்து அந்த உலகத்தினுள்ளே தம்மை இழந்துவிடுவார்கள்.

குழந்தைகள் நித்திரைக்குச் சென்ற பின்னர் அவர்களுக்குத் தெரியாமல் அவர்களின் வர்ணம் தீட்டும் புத்தகங்களை எடுத்து இரகசியமாக வர்ணம் தீட்டிவரும் பலருக்கு சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த வர்ணம் தீட்டும் புத்தகங்கள் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளன.

தொழில்நுட்ப வளர்ச்சியில் கட்டுப்பட்டு, சமுதாய மற்றும் குடும்பக் கட்டமைப்பில் சிதறுண்டுபோய் அன்றாட வாழ்வில் மனநிம்மதியைத் தொலைத்து விட்டவர்கள், குழந்தைப் பருவ விடயங்களை மீளக் கொண்டு வந்து மனஅழுத்தத்தை இல்லாமல் செய்வது ஆரோக்கியமான விடயம் என்கின்றார்கள் மருத்துவர்கள்.

மற்றைய நோய்களின் ஆரம்ப அறிகுறிகளுக்கு மனஅழுத்தமே அடிப்படைக் காரணம் என்ற நிலையில், மனஅழுத்தம் எமது அன்றாட வாழ்வில் ஓர் அங்கமாகவே கருதப்படுகின்றது. எம்மைச் சுற்றி நடந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு விடயங்களும் எமக்கு அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. இந்த அழுத்தத்தை மனம் உணரும்போது உடலில் சில மாற்றங்கள் ஏற்பட்டு அதிகப்படியான சக்தியும், வலிமையும் ஏற்படுகின்றது. இது ஒரு சாதாரண உடல்நிலைச் செயற்பாடாக உள்ளபோதும் இந்தச் சூழ்நிலை அடிக்கடி ஏற்பட்டு தொடர்ந்து நீடிக்குமேயானால் அது மனஅழுத்தமாக மாறிவிடும்.


வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள வேண்டுமானால், முதலில் மனதின் உள்ளகத் தன்மையை ஒரு குறிப்பிட்ட வழியில் உறுதியுடன் நிலைநிறுத்த வேண்டும். இதற்கு ஓய்வுநிலை, வர்ணம் தீட்டும் பழக்கம், யோகாசனம், மனஅழுத்த முகாமைத்துவம், நண்பர்கள் தொடர்பு, பொழுதுபோக்கு போன்ற ஏராளமான பல இயற்கை முறையிலான வழிகள் இருக்கின்றன. இவற்றில் ஏதாவதொரு முறையுடன் ஒவ்வொருவரும் தத்தமது வாழ்க்கை முறைக்கு ஏற்ப தமது மனஅழுத்தத்தைக் குறைத்துக் கொள்ள முடியும்.

உள்ளார்ந்த மனதில் குழப்பங்கள் இல்லாத போதுதான் வெளிப்புறப் பிரச்சனைகளை சரியான முறையில் கையாள முடியும். அப்போதுதான் மனஅழுத்தத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

தகவல்: Toronto Star



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# பாடினால் என்ன தப்பு?

சங்கத் தமிழிலே வெரூஉம் என்ற சொல் இடைக்காலத் தமிழிலே அஞ்சும் என்று மாற்றம் அடைந்து தற்காலத் தமிழிலே பயப்படும் என்று வழங்கப்படுகின்றது. தொல்காப்பியம் முதல் எத்தனையோ இலக்கண நூல் வரம்புகள் பாதுகாப்பைக் கொடுத்தும் தமிழ் மொழியால் வெரூஉம் என்ற சொல்லைப் பயப்படும் என்ற மாற்ற நிலையை அடையவிடாமல் தடுத்து வைத்திருக்க முடியவில்லை.

இவ்வாறு எத்தனையோ ஆயிரம் பழந்தமிழ்ச் சொற்கள் வழக்கொழிந்து புதிய சொற்கள் அந்த இடத்தை இன்றைய தமிழிலே பிடித்துக் கொண்டு விட்டன. மறைமலை அடிகள் முதல் பல தமிழ் அறிஞர்கள் தனித்தமிழிலே பேசினார்கள். எழுதிப் பார்த்தார்கள். ஆனால் இவர்களை எல்லாம் வென்று கொண்டு கால மாற்றம் எத்தனையோ புதுச் சொற்களைத் தமிழுக்குச் சுமந்து கொண்டுதான் வருகின்றது இன்றும்.

புதிய சொற்களைக் காலம் எங்கிருந்தும் திருடிக் கொண்டுவந்து விடவில்லை. அறிவியல் வளர்ச்சியால் வியாபாரத் தொடர்ச்சியால் புலம் பெயர்ந்த வேற்று மொழி உறவுகளால் தமிழ்ப் பேச்சு வழக்கிலே கலந்து கொண்டு செல்வாக்குப் பெற்றுவிட்ட சொற்களை இனித் துரத்த முடியாது என்ற நிலையில் ஏற்றுக் கொண்டு கலப்புத் திருமணம் செய்த சோடிகள் பெற்றாரிடம் வருவது போல காலம் அழைத்து வரும் போது தமிழ் விரும்பாவிட்டாலும் மவுனமாக ஏற்றுக் கொள்கின்றது. அதுவே உண்மை.

தொல்காப்பியம் படித்தவர்களுக்குத் தெரியும். தொல்காப்பியர் ஒவ்வொரு அதிகார முடிவிலும் தான் சொன்ன இலக்கணத்துக்கு புறநடை சொல்லுவார். சில இடங்களில் நான் சொன்ன இலக்கணம் பொருத்தம் இல்லாதது போலத் தெரியும். அங்கேயெல்லாம் உலக வழக்கை உணர்ந்து காலத்தோடு ஒட்டி இலக்கணத்தைப் பிழையின்றி முடித்துக் கொள்ளுங்கள் என்று அந்தப் புறநடைகள் வரும்.

செய்யுள் மருங்கின் மெய் பெற நாடி,
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவ உள எனினும், வந்தவற்று இயலான்,
திரிபு இன்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.
(தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல்)

இது புறநடை என்ற பேரால் இலக்கண ஆசிரியர்கள் காலத்தோடு செய்து கொண்ட சமாதானம் என்றே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். காலமாற்றம் அது ஏற்படுத்தும் வாழ்வியல் மாற்றம் அந்த வாழ்வு ஏற்படுத்தும் மொழியியல் மாற்றம் போன்றவற்றோடு முரண்டு பிடிக்க இயலாது என்பதைத் தொல்காப்பியர் அறிந்தே இருந்தார்.

இருப்பினும் புதிதாக ஏற்றுக் கொண்ட சொற்களுக்கு தன் செல்வாக்கைக் காட்ட இலக்கணம் நீங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சில நிபந்தனைகளை விதித்துப் பார்த்தது. புதிய சொற்கள் அதிக காலம் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை. சொல்வழி கேளாதவர்களுக்கு அறிவுரை எதுக்கு என்று இலக்கணங்கள் ஒதுங்கிக் கொள்ள இன்று எத்தனையோ வேற்று மொழிச் சொற்கள் தாராளமாகப் புகுந்திருக்கின்றன தமிழில்.

இந்தப் புது வரவால் மொழி சிதைகின்றது என்று சிலர் கூவ இல்லை இது எவ்வளவு வசதியாக இருக்கின்றது என்று பலர் நினைக்கின்றார்கள். அதனால் புதுச் சொற்கள் வலிமை பெறத் தொடங்கின. அந்த வலிமைக்கு உதாரணமாக ஐஸ்கிறீம் என்ற சொல்லையே குளிர்களி என்று மாற்றிய ஈழத்தால் ஒன்றும் செய்ய முடியாமல் சில தகுதிப் பட்டங்களை கேணல் பிரிகேடியர் என்று தான் கடைசிவரை விட்டுவைக்க முடிந்தது பாவனைச் சுகத்துக்காக.

இப்படியான நிலையில் ஒரு கவிஞர் வருங்காலத்தை உணர்ந்து தன் கவிதைகளில் ஆங்கிலச் சொற்களை அப்படியே கலந்து பாடினார். அவர் ஏதோ சாதரண கவிஞர் அல்ல. சாகித்திய மண்டலப் பரிசு வென்றவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் படித்துப் புலவராக வெளிவந்தவர்' அவர் இளவாலை மயிலங்கூடலைச் சேர்ந்த புலவர் பார்வதிநாதசிவம் அவர்கள்.

நாடியைப் பார்த்தார் இல்லை
    நயனத்தைப் பார்த்தார் இல்லை
மாடியைப் பார்த்த வாறே
    மருந்தினை எழுதித் தந்தார்
நாடியைப் பார்த்துத் தந்தால்
    நன்றென்றேன் அயலில் நிற்கும்
லேடியைப் பார்க்க வேண்டும்
    லேட்இப்போ செல்செல் என்றார்

புலவரின் இந்தப் பாடலைப் பாருங்கள். எளிமையான தமிழ். இலக்கணம் தவறாத செய்யுள். நோயென்று போன ஒருவரின் முகத்தை வைத்தியர் திரும்பிப் பார்க்கவில்லை. அவரின் நாடி நரம்பைக் கூடத் தொட்டுப் பார்க்கவில்லை. மாடியைப் பார்த்துக் கொண்டு மருந்து எழுதிக் கொடுக்கிறார். ஏன் ்கை நாடியைப் பிடித்துப் பார்த்து மருந்து தர மாட்டீர்களா என்று கேட்டால் பக்கத்திலே நிற்கிற பெண்ணைப் பார்க்க வேண்டும். ஏற்கனவே பிந்தி விட்டது நேரம். போங்கோ என்று சொல்கிறார் இது பாடலின் பொருள்.

இந்தக் கவிதையிலே லேடி லேட் என்ற இரு ஆங்கிலச் சொற்களைப் புலவர் பாட்டின் இடையிலேயும் அல்ல எதுகை மோனையாகவே பயன்படுத்தி இருப்பதைக் காணலாம். இது பாட்டின் எளிமையைக் கூட்டுவதோடு பொருளும் தெளிவாக புரியும் வண்ணம் இருக்கின்றது. அதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.


இன்னொரு பாட்டில் புலவர் சொல்லுவார்

அம்மியில் பலத்த ஓசை
    எழுந்திட அரைப்பதாலே
மம்மியின் இதய நோய்கள்
    வரவரக் கூடு தென்பார்

(24 பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 22

சித்திரை மாதம் – புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் சென்ற மாதம் பல முகப்புத்தகப் பதிவர்களுக்கும் கொண்டாட்டமாக இருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தை மாதம்தான் தமிழ்ப்புத்தாண்டு என்று நிறுவுவதையே பலரும் குறியாகக் கொண்டிருந்தனர். பலவித விமர்சனங்களை காணக்கூடிதாக இருந்தது. ஒருவர் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள் என்று வாழ்த்துத் தெரிவிக்க இன்னொருவர் அதை விமர்சித்தார். தன் பதிவில் அவர் *'ஆங்கிலேயரின் புத்தாண்டுக்கு 'புத்தாண்டு வாழ்த்து" என மொட்டையாகச் சொல்லிவிட்டு நமது புத்தாண்டுக்கு மட்டும் 'தமிழ் புத்தாண்டு வாழ்த்து" என தமிழைக் குறிப்பிட்டு சொல்வது, பக்கத்து வீட்டு பெண்ணை அம்மா என பொதுப்படையாக அழைத்துவிட்டு சொந்த தாயை பெயர் சொல்லி அழைப்பது போலத்தான்..."* எனக் கோபமுற்று பதிவிட்டிருந்தார்.

ஒரு முகப்புத்தகப் பதிவர் குறும்பாக *'ஆங்கிலேயர்கள் தங்கள் புத்தாண்டில் சாம்பேயின் மது அருந்துவார்கள், கேளிக்கை விருந்துகளில் பங்கெடுப்பார்கள். சீனர்கள் தங்கள் புத்தாண்டில் சிவப்பு காகித உறையில் பணம் வைத்து கொடுத்து அன்பை பகிர்ந்து கொள்வார்கள். ஜப்பானியர்கள் தங்கள் புத்தாண்டில் கோவிலிலுள்ள பெரிய மணியை 108 முறை அடிக்க செய்வார்கள். யூதர்கள் தங்கள் புத்தாண்டில் ஆப்பிளை தேனில் ஊற வைத்து சாப்பிட்டு மகிழ்வார்கள்.' தாய்லாந்து மக்கள் தங்கள் புத்தாண்டில் நீர் குமிழ்களை நண்பர்கள் மீது வீசி விளையாடுவார்கள். தமிழர்கள் தங்கள் புத்தாண்டில் புத்தாண்டு தை மாதமா சித்திரை மாதமா என சண்டையிடுவார்கள்."* என்று எழுதியிருந்தார்.

புத்தாண்டுப் பிறப்பு தை மாதமா சித்திரையா என்பதை பலரும் விவாதிப்பதற்குத் தமிழக அரசியல் கட்சிகளின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது என்பது பலரும் அறிந்ததே. இதை விளக்குவதுபோல் இருந்த ஒரு பதிவை படித்ததும் சிரித்துவிட்டேன். அது இதுதான்: *'ஒருத்தர் தமிழ் புத்தாண்டு தையா? சித்திரையா?ன்னு கேட்டார். எனக்கே தெரிலங்க, ஆனா கலைஞர் கருணாநிதி 'தை'ன்னு சொல்றாருன்னு சொன்னேன். கலைஞர் 'தை"ன்னு சொல்றாரா, அப்ப 'சித்திரை"யாத்தான் இருக்கும்ன்னு சொல்லிட்டு போறார்."*

தமிழ்நாட்டில் இப்போதெல்லாம் முகப்புத்தகத்தின் வீச்சு பலமாக இருப்பதன் தாக்கத்தால் அங்கு நடக்கும் விடயங்கள் பலவும் கனடாவிலும் பல பரிணாமங்களில் விவாதிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் எங்கோ ஒருபகுதியில் தாழ்த்தப்பட்ட சாதியினர் சிலர் பெரியார் ஈ.வே.ராமசாமி படத்துக்கு செருப்பால் அடித்தும், படத்தின்மேல் சிறுநீர் கழித்தும் அவமதிக்கும் காட்சிகளைக் கொண்ட படங்கள் முகப்புத்கத்தில் பகிரப்பட்டு சலசலப்பைக் கிளப்பியதல்லவா. அப்படங்களை கனடாவில் இருக்கும் முகப்புத்தகப் பதிவர் ஒருவர் தானும் பகிர்ந்து *'பெரியார்மீதும் பெரியாரியம் மீதும் பல எதிர்ப்பும் விமர்சனங்களும் கோபமும் இருந்தாலும் இந்த அளவுக்குக் கீழ்த்தரமாக எந்தப் பார்ப்பானும் பண்ணிவிட முடியாது. பண்ணமாட்டான் என்பது உறுதி"* என்று எழுதிக் கடிந்திருந்தார். இந்தப் பதிவு பல விமர்சனங்களை இங்குள்ள முகப்புத்தகப் பதிவர்களிடையே கிளப்பி விட்டது. நானும் அவர் எழுதியதை வழிமொழிந்து *'எந்தப் பார்ப்பானும் இப்படிப் பண்ணிவிட மாட்டான். மதக்கோட்பாடுகளை எதிர்த்து இதற்கு ஒத்த சில அநாகரிகங்களை சில நாத்திகவாதிகள் செய்ததை ஒரு காலத்தில் பார்த்திருக்கிறோம். இப்போது சக்கரம் மாறிச் சுழல்கிறதுபோலும்"* என்று எழுதியிருந்தேன்.

இந்த விவகாரம் நீண்ட விவாதத்தைக் கிளப்பியது. *'தேவதாசி முறை, குலக்கல்வி, பெண்களுக்கான படிப்பு, அனைவருக்கும் கோவில் உள்ளே செல்ல அனுமதி, அனைவரும் துண்டை தோளில் போட்டு, காலில் செருப்பு போட்டு அனைத்து வீதிகளிலும் நடக்க வைத்த கிழவனின் அருமையோ, பெருமையோ எதுவும் கூலிக்கு மாரடிக்கும் அந்த அற்பர்களுக்குத் தெரியாது"* என ஒரு ஈவேரா ஆதரவாளர் ஒருவர் எழுதி ஈவேராவை அவமதித்தவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள் எனக் கடிந்திருந்தார். *'தேவதாசி முறையை ஒழித்ததில் 'கடவுள் இல்லை' என்று சொன்ன பெரியாரைவிட, தமிழ் கிறிஸ்தவ மிசனரிகள்தான் அதிக பங்கு வகித்தார்கள்'* என ஒருவர் வலாற்றை அசைமீட்டார்.

*'தலித்துகள்கூட இன்று சாதியம் ஒழிக எனக் குரல் எழுப்புவதில்லை. அவர்கள் தாங்களும் ஆதிக்க சாதிகள் எனும் வகையறாக்களாக மாறிப்போயினர். பெரியார் ஏற்படுத்தியதாக இன்று சமூகத்தில் எந்த மாற்றமும் இல்லை. நீங்கள் பெரியார் ஏற்படுத்திய மாற்றமாக கருதப்படக்கூடிய மாற்றங்கள் பிற இந்திய மாநிலங்களில் பெரியார் இல்லாமல் நிகழ்ந்து இருப்பவைதான்'* என ஒருவர் இட்ட பதிவு சிந்திக்க வைத்தது.

தமிழகத்தில் திராவிடர் கழகம் நடத்திய தாலியை அகற்றும் தாலி அறுப்புப் போராட்டமும் நம் கனடா முகப்புத்தக உலகில் கவனத்தைப் பெற்று பலதரப்பட்ட விவாதங்களை எழுப்பி நின்றது. *'1920 களில் பெண் அடிமைக்கு எதிராகப் போராடி தாலியை அறுத்ததை நியாயமான போராட்டமாகப் பார்க்க முடிந்த என்னால், தற்பொழுது இந்தத் தாலியை அகற்றும் போராட்டத்தை வெறும் வெற்று விளம்பரமாக மட்டுமே பார்க்க முடிவதற்கு காரணம் என்ன? யோசிக்க வேண்டியது போலிப் பகுத்தறிவுவாதிகள்தான்"* என்றார் ஒருவர்.

இன்னொரு பதிவு: *'எனக்கு என் பாட்டி கொடுத்த ஸ்வெட்டர் பொக்கிசம். அதில் நான் இறைவனைக் காண்கிறேன். என் பாட்டியுடன் நான் வாழ்ந்த வீட்டில் இருக்கும் வேப்ப மரம் பொக்கிசம். அதில் நான் இறைவனைக் காண்கிறேன். என் தாயாரின் திருமண பட்டுப் புடவை பொக்கிசம், அதில் நான் இறைவனைக் காண்கிறேன். இப்படி பல விடயங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இதுதான் இறைவனா? மரம், புடவை போன்றவை எல்லாம் இறைவனாக முடியுமா என்று கேள்விகள் இருக்கலாம்தான். அவற்றில் நியாயமும் இருக்கலாம்தான், ஆனால் அவற்றில் நிதர்சனம் என்பதும் இருக்க வேண்டும், எனக்கு எது கடவுள், எனக்கு எது முக்கியம் என்பது என் தனிப்பட்ட முடிவுக்கு உட்பட்டது என்பதுதான் உண்மையான பகுத்தறிவு'* என்றது.

இதற்கிடையில் தாலி அறுப்பை சம்பந்தப்படுத்தி ஒரு ஜோக்கை ஒருவர் பகிர்ந்திருந்தார். ஒரு பொலிஸ் ஸ்ரேசன். அங்கு இரு திருடர்கள் கைதாகி உட்கார்ந்திருக்கிறார்கள். பக்கத்தில் நிற்கும் ஒரு போலிஸ்காரர் மற்றொரு போலிஸ்காரரிடம் திருடர்களைக் காட்டியவாறு சொல்கிறார்: *'சங்கிலித் திருடன்கள்தான் ஸார். கேட்டா தாலியை அகற்றும் நிகழ்ச்சியை நடத்திணோம்னு என்று கதை விடுறாங்க ஸார்'.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவாழ் அண்ணாவியார் மிக்கேல்தாசுக்கு பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் கூத்துக்கலைச் செம்மல் விருது







தமிழினத்தின் மிகப் பிரதானமான கலையான கூத்துக்கலை வளர்ச்சிக்காக தொன்று தொட்டு பல கலைஞர்களும், அறிஞர்களும் வாழ்ந்து மறைந்து போயுள்ளனர். உலகத் தமிழினத்துக்காக அவர்கள் விட்டுச்சென்ற உன்னத கூத்துக் கலைக்காக அவர்தம் பின்னால் நடந்து ஆயுள் பரியந்தம் உழைத்த அண்ணாவிமாரையும், கலைஞர்களையும் வரலாறு குறித்து வைத்திருக்கின்றது. ஈழதேசத்தின் மிகத்தொன்மையான கூத்துக்கலைகளில் சுடர்மிகு இரு விழிகளாக திகழ்பவை தென்மோடி, வடமோடி கூத்துக்களாகும். தென்மோடிக் கூத்தின் மூலவராகவும், தனித்துவம் மிக்க கம்பீரக் கலைஞராக, உச்சநிலை கொண்ட பாடகராக பன்முகத்திறனுடன் திகழ்ந்தவர் அமரர் கலைக்குரிசில் நீ.வ.அந்தோனி அண்ணாவியார் அவர்களாகும். அவரின் மறைவுக்குப் பின் அவரது மகன் கலைவருணன் சவிரிமுத்து அவர்கள் அண்ணாவியாராகப் பணியாற்றி வருகின்றார். அவருடைய மகன் அண்ணாவி ச. மிக்கேல்தாஸ் 90களில் இருந்து பல பிரதிகளை உருவாக்கி புலம் பெயர்ந்த தேசங்களின் கலைஞர்களை ஒன்றிணைத்து அரங்கேற்றும் பணியை முழுநேர ஊழியமாக செய்து வருகின்றார்.

இந்த வகையில் அண்ணாவியார் ச.மிக்கேல்தாஸ் அவர்களை கௌரவிக்கும் முகமாக பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் அவர் நம் தமிழ்மரபை அயராமல் வெளிக்கொணரும் கலைப்பணியை எண்ணங்களிலேற்றி மாசி மாதம் 23ம் நாள் புதுவை பல்கலைக்கழக நிகழ்கலைப்பள்ளி அரங்கில் பேராசிரியர், முனைவர் கரு.அழ.குணசேகரன் புலமுதன்மையர் அவர்களின் தலைமையில். பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் முன்னிலையில் "கூத்துக்கலைச் செம்மல்" விருது வழங்கலும், கூத்துக்கலை பற்றிய விளக்கவுரையும், செய்முறைப் பயிற்சியும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# தலைமைத்துவ பண்புப் பெண்கள் மதிப்பளிப்பு







ஸ்காபரோவில் தலைமைத்துவப் பண்புமிக்க மாணவிகளுக்கும் பெண்களுக்கும் விருது வழங்கும் நிகழ்வொன்றை ஸ்காபரோ ஏஜின்கோர்ட் மாகாணசபை உறுப்பினர் சூ வொங் கடந்த மாதம் 16ம் தகதி ஸ்காபரோ லமரக்ஸ் கல்லூரி அரங்கில் நிகழ்த்தினார். இதில் ஸ்டீபன் லீகொக் உயர் பாடசாலையின் 12ம் வகுப்பில் கல்வி கற்கும் கோபிதா சிதம்பரநாதன், 42ம் பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர் டயானா ஜொனிஸ் மற்றும் வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜெயந்தி விஜயகுமாரக் குருக்கள், அனுஜா இந்திரகுமார், சர்மினி பிரதீபன், சிறீரஞ்சினி தாரண சர்மா, சோபியா சுகுமார் ஆகியோர் உட்பட மொத்தம் நான்கு மாணவிகளும், 15 பெண்களும் விருதுப் பட்டயம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்ராறியோ அரசின் தன்னார்வத் தொண்டர் விருதுகள்

## மிசிசாகா மற்றும் ஸ்காபரோ வைபவங்கள்







ஒன்ராறியோ அரசாங்கம் இங்குள்ள பல்வேறு சமூக அமைப்புகள் ஊடாக தன்னார்வத் தொண்டாற்றும் சேவையாளர்களுக்கு விருது வழங்கி மதிப்பளிக்கும் வைபவங்கள் கடந்த மாதம் பல்வேறு நகரங்களிலும் நடைபெற்றது. றிச்மன்ட்ஹில், மிசிசாகா ஆகிய நகரங்களில் நடைபெற்ற நிகழ்வுகளில் தமிழர் தகவல் நிலையத்தின் தொண்டர்கள் விருதுகளைப் பெற்றனர். மேலுள்ள ஒளிப்படங்களில் மிஸிஸாகா Cawthra Park SS பாடசாலை மாணவியான செல்வி அருமிதா சசிகரன் தனக்கான விருதினைப் பெறுவதையும், தமது பெற்றோர் மற்றும் மூத்த சகோதரி சகிதம் நிற்பதையும் காணலாம். மிகுதிப் படங்களில் ஸ்காபரோ சாயி சமித்தி நிலையம், ஒன்ராறியோ முதுதமிழர் மன்றம் உட்பட வேறு சில அமைப்புகளைச் சார்ந்த தமிழர் சமூகத் தொண்டர்கள் சிலர் ஸ்காபரோவில் நடைபெற்ற நிகழ்வில் விருதுகளைப் பெறுவதைக் காணலாம். இந்த வருட விருதுகள் வழங்கும் நிகழ்வுகள், ஜூன் மாத இறுதியில் கிங்ஸ்ரன் நகரில் நடைபெறும் வைபவத்துடன் முடிவுக்கு வரும்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிமா 'டான்ஸ் அகடமி' வருடாந்த விழா

கனடா பிரிமா 'டான்ஸ் அகடமி'யின் வருடாந்த விழா கடந்த மாதம் 4ம் ரிகதி மார்க்கம் கொன்வென்சன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இங்கு நடனம் பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களின் பல்வேறு வகையான நடனங்கள் இங்கு மேடையேற்றப்பட்டன. வீடு விற்பனை முகவர் திரு. சங்கர் மாணிக்கம் சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றி குத்து விளக்கேற்றி விழாவை ஆரமபித்து வைத்தார்.










## ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் லிபரல் கட்சி வேட்பாளராகிறார்



ரொறன்ரோ பொலிஸ்மா அதிபராகப் பல வருடங்கள் கடமையாற்றி கடந்த மாதம் ஓய்வுபெற்ற பில் பிளெயர் கனடிய அரசியலில் குதிக்கின்றார். ஸ்காபரோ மேற்குத் தொகுதியில் லிபரல் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்கான போட்டியில் தாம் பங்குபற்றுவதாக அவர் அறிவித்துள்ளார். பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சில நாட்களிலேயே நாடாளுமன்ற அரசியலில் இறங்கும் இவரது அறிவித்தல் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இத்தொகுதிக்கான லிபரல் அபேட்சகர் தெரிவில், சி.ரி.வி யில் பணியாற்றிய ஊடகவியலாளர் ரிம் வெபரும் போட்டியிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய நாட்டிய கலாஷேத்திர 12வது ஆண்டு விழா











கனடாவில் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இயங்கும் நாட்டிய கலாசேத்திரவின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழா கடந்த மாதம் 4ம் திகதி, ஸ்காபரோ சீனக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. பல்வேறு கலாசாரங்களையும் சித்தரிக்கும் நடனங்களை மாணவிகள் இங்கு வழங்கினார்கள். இதன் அதிபர் தேனுஜா திருமாறனுக்கு மார்க்கம் நகரசபையின் பாராட்டுப் பத்திரத்தை அதன் கவுன்சிலரான லோகன் கணபதி வழங்கி சிறப்புச் செய்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# City residents without a health card Get care from U of T undergrads

Imagine a clinic providing free health care to Toronto's most vulnerable residents: people with no fixed address, health insurance or ID. Too utopian? Not for a group of University of Toronto students. In 2007, U of T students from a variety of health profession programs came together to form the Interprofessional Medical and Allied Groups for Improving Neighbourhood Environment (IMAGINE). And by 2010, with support from faculty and community partners, the IMAGINE Clinic was open and offering medical, nursing, pharmacy and social work services. In 2012, physiotherapy was integrated, and the student volunteers became able to earn Interprofessional Education credits for their service.

"It's a unique, underserved patient population, so it's a great opportunity to be able to help," says Claire Hooper, a third-year pharmacy student volunteering at IMAGINE.

Students volunteer at the clinic for three consecutive Saturdays, followed by a guided group reflection day. They work in teams of five students drawn from each health discipline, supervised by five preceptors – licensed healthcare practitioners, who are also volunteers.

The students take the patient's history, perform a physical exam, interpret information, write clinical notes and develop a treatment plan. Christopher Wang, now in his second year of medicine, likens the experience to doing a puzzle. "We gather all the pieces and then with the expertise of everybody we try to figure out what this patient is here for and what we can do to help."

More than 200 clients were assessed and treated at IMAGINE last year. Many patients come in for physiotherapy, because it's generally not covered by health plans, but students also see people with common ailments, infections or mental health issues and they treat them all. The clinic is open every Saturday from 10 a.m. to 2 p.m., except on long weekends and holidays.

One patient, visiting for a follow-up about her back pain, is happy with the service she is getting. "I like when they show me some exercises or give me a handout so I can practice at home," she says. "They really want to keep me on track."

"The students are getting intensive exposure to the social determinants of health," says Norma C. Carter, a general practitioner who has been volunteering at IMAGINE as a physician preceptor since 2011. "And they also learn not to be afraid of caring for a challenging population." Hooper agrees: "It makes you a better health practitioner."

(Courtesy: U of T Magazine – Spring 2015 Issue)

# Message from Glen Murray

## Ontario Minister of Envioronment and Climate Change.

Climate change is the critical issue of our time.

Two numbers that are vital for Ontarians to be aware of: 4, the number of degrees in this century that the planet is on track to warm by, and; 6, the number, in trillions of dollars of new economic growth that will result from moving to a low-carbon economy.

A 4 degree increase in the mean temperature of our planet will have catastrophic consequences. Severe weather events are already driving up insurance costs and are severely damaging our infrastructure. Food security and costs will be an early problem as climate change impacts places where our food is grown and climate change affects our water supply.

Climate change is a problem with a solution. Reducing our carbon emissions will produce a new innovation economy in Ontario. Building on our early leadership in sustainable technology and innovation, Ontario is well positioned to seize the opportunities of a low-carbon economy if are prepared to take bold action.

Reducing our energy costs through the establishment of new building standards, and the use of new technologies, will enable us to reduce the emissions from our homes. Moving to low-carbon and zero emission transportation options will allow us to move to and from our homes and jobs more efficiently while improving the air we breathe and growing our manufacturing sector.

This new low-carbon economy will mean more and better jobs. It will avoid an environmental crisis and secure our future as a global green service and industrial economy leader.


We have already made great strides by eliminating coal power generation in Ontario, strengthening our building codes, and beginning to electrify GO Transit, but there is much more that must be done. We know we can do this and your participation in developing this strategy is essential to our success.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், இம்பிளான்ற்
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

**Computek College**

Est. 1991

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005



*Register for a Diploma Course and receive a*

*(offer valid until Dec 31, 2014 - some conditions apply)*



FREE Laptop

NOW ACCEPTING
INTERNATIONAL STUDENTS!

**WWW.COMPUTEK.EDU**

**Toronto Campus**
301-2347 Kennedy Rd.
416.321.9911

**Markham Campus**
202-7 Eastvale Dr.
905.471.3344

**Scarborough Campus**
248-2390 Eglinton Ave. E.
416.285.9941

**Diploma Programs:**

- Community Services Worker (CSW)
- Personal Support Worker (PSW)
- Early Childcare Assistant (ECA)
- Medical Office Admin. (MOA)
- Accounting & Payroll Admin.
- Computerized Accounting
- Int. Application Development
- Ent. Network Engineering
- Business Administration
- Network Engineering

**Are you unemployed or under-employed?**
Are you receiving or received EI?
Re-entering workforce after Maternity or Parental leave?

Second Career provides laid-off workers with skills training to help them find jobs in high-demand occupations in Ontario

SECOND CAREER
&
OTHER FUNDING OPTIONS AVAILABLE
CALL FOR DETAILS

Financial assistance may be available for those who qualify



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

84

## தமிழ்க் கடவுளர் திருமாலும் முருகனும்

பன்னிரு ஆழ்வார்களுக்கு முன்னோடிகளாக திருமால் புகழ்பாடிய பல புலவர்கள் சங்க காலம் தொட்டு இருந்துள்ளனர்.
தொல்காப்பியர் காலத்தில் இயற்கை மற்றும் நடுகல் வணக்கம் தான் பரவலாக இருந்திருக்கிறது. நடுகல் வணக்கம் பற்றிப் பல செய்திகளைத் தொல்காப்பியர் தந்திருக்கிறார்! நடுகல் நட்ட இடத்தில் வழிபாடும் ஆட்டங்களும் நடைபெற்றதாக அறிகிறோம்! வேலன் வெறியாட்டம், குரவைக் கூத்து போன்ற ஆட்டங்கள் பற்றிய இலக்கியக் குறிப்புகள் உள்ளன!

மறைந்த முன்னோர்கள் நினைவாக, மாட்டுப் பொங்கல் அன்று, நடுகல் வைத்துப் படையல் போடும் வழக்கம் தமிழ்நாட்டில் இன்றைக்கும் உள்ளது.
தமிழர் பண்பாட்டில் ஆரியம் கலப்பதற்கு முன்னரே மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விட்டன.
முதலில் இயற்கை என்பது நடுகல்லானது! பின்னர் நடுகல் என்பது தெய்வம் ஆனது! இயற்கை வழிபாட்டின் படி, மாயோன், முல்லைக் கடவுள் ஆனான்!
மாயோன், சேயோன் என்பவர்கள் அந்தந்த நிலத்தின் வீரர்களாகக் கூட இருந்திருக்கலாம்! நடுகல் வணக்கமே நாளடைவில் சிறு தெய்வங்கள் மற்றும பெருந் தெய்வ வணக்கமாக வளர்ச்சி பெற்றது.

இந்து மதத்தில் சில கடவுளரை தமிழ்க் கடவுள் என அழைக்கும் வழக்கமுண்டு. அதில் முக்கியமாக இடம்பெறுபவர்கள் திருமாலும் முருகனும்தான்.
இன்று தமிழில் கிடைக்கக் கூடிய மிகப் பழமையான நூல் தொல்காப்பியம் மிகப் பழமையான தமிழ்ச் சமுதாயத்தை படம் பிடித்துக் காட்டுகிறது.

மாயோன் மேய காடுறை உலகமும்,
சேயோன் மேய மைவரை உலகமும்,
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்,
வருணன் மேய பெருமணல் உலகமும்,
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும்
படுமே! (தொல்காப்பியம்)

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று சொல்வதுதான் பொது வழக்கு. இதில் முல்லை, குறிஞ்சி என்று இடம்மாறி வருவது ஏன் என்பது தெரியவில்லை.

* முல்லை காடும் காடு சார்ந்த இடமும் பச்சைப் பசேல்ன்னு தானே இருக்கும்? அதனால் பச்சை மாமலை போல் மேனி!
* முல்லை பெரும்பொழுது கார் காலம்! அதனால் கார் மேனி வண்ணன்!
* முல்லை சிறுபொழுது – மாலை! அதனால் மால் – திருமால்!
* முல்லை ஆயர்கள் நிலம்! அதனால் ஆயர் தம் கொழுந்தே!
* முல்லை தொழில் – ஆநிரை மேய்த்தல்! – பசுக்களை மேய்த்தான்!
* முல்லை விளையாட்டு – ஏறு தழுவுதல் – காளைகளை அடக்கி நப்பின்னையை மணம் புரிந்தான்!
* முல்லை நிலத்தில் காதல் மிகுதி! அதனால் இவன் காதல் மன்னன்!

இப்படி எல்லாமே இயற்கையை ஒட்டிய வழிபாடு தான்! இயற்கைக் கடவுளாகத் தான் மாயோன்ஃதிருமால் அறிமுகமானான்.

ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய கருப்பொருள்கள் பதினான்கில் தெய்வமும் ஒன்று என்று குறிப்பிடும் தொல்காப்பியம், முல்லை நிலத்துக்குரிய தெய்வம் திருமால் எனவும் குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வம் சேயோன் (முருகன்) எனவும் சுட்டுகிறது. இதன் மூலம் திருமால் முல்லை நில மக்களின் திணைக் கடவுளாக இருந்தமையை அறியலாம்.

ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய கருப்பொருள்கள் பதினான்கில் தெய்வமும் ஒன்று என்று குறிப்பிடும் தொல்காப்பியம், முல்லை நிலத்துக்குரிய தெய்வம் திருமால் எனவும் குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வம் சேயோன் (முருகன்) எனவும் சுட்டுகிறது.

இன்று மாயோனும் சேயோனும் அதிகமாகப் பேசப்பட்ட அளவுக்கு, வேந்தன், வருணன் மக்களால் அவ்வளவாகப் பேசப்படுவதில்லை! சங்க காலத்தில் குறிப்பிடப்பட்ட சில தெய்வங்கள் பிற்காலத்தில் வழிபடு தெய்வங்கள் பட்டியலில் இருந்து மறைந்து போனார்கள். அதில் இந்திரன் ஒருவன். திருமாலின் அண்ணன் எனக் கொண்டாடப்படும் பலராமன் இன்னொருவர்.

நிலத்தின் அடையாளமாக இருந்த வேந்தன் மற்றும் வருணன் வெறும் நில அடையாளங்களாக மட்டும் நின்று விட்டனர். தமிழ் மக்களின் வாழ்வியலில் ஒன்றவில்லை! வேந்தன் என்பது இந்திரனைக் குறிக்கிறானா அல்லது வேறு தெய்வத்தைக் குறிக்கிறானா என்பதும் தெரியவில்லை. இந்த நிலத் தெய்வங்களில் சிவன் விடுபட்டுப் போனதும் வியப்பாக இருக்கிறது. தொல்காப்பியர் காலத்தில் சிவ வழிபாடு இருக்கவில்லை போல் தெரிகிறது. ஆனால் சங்க இலக்கியத்தில் சிவனையும் வழிபட்டனர், திருமாலையும் வழிபட்டனர், சிவன் மைந்தனான முருகனையும் வழிபட்டனர்.

பக்தி இலக்கியத்தைப் பற்றி அறிந்து கொள்ள அதற்கு முன் தோன்றிய இலக்கியப் படைப்புகளை அறிந்து கொள்வது அவசியம். அது போலப் பக்தி இலக்கியத்தின் செழுமையை உணர்ந்து கொள்ள, பக்தி இலக்கியத்திற்குப் பின் வந்த இலக்கியங்களைப் பற்றி அறிவதும் இன்றியமையாதது. ஆக, பக்தி இலக்கியத்தைச் சரியாகப் படிக்க வேண்டும் எனில் அவ்விலக்கியங்களை முன்னும் பின்னுமாக நோக்குதல் பொருத்தம் ஆகும்.

வைணவ சமயப் பக்தி இயக்கத்திற்கு முன் தோன்றிய பழந்தமிழ் இலக்கியப் பதிவுகளைப் பார்ப்போம். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பரிபாடல். அதில் திருமால், செவ்வேள் இருவரது புகழ் பேசப்படுகிறது. இந்த நூலில் 70 பாடல்கள் தொகுக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்போது 22 பாடல்களே எமக்குக் கிடைத்துள்ளன. திருமால் மீது ஆறு பாடல்களும் செவ்வேள் மீது 8 பாடல்களும் வைகை மீது 8 பாடல்களும் பாடப்பெற்றுள்ளன.

பரிபாடல் ஓர் இசை நூல். எல்லாப் பாடல்களுக்கும் பண் வகுக்கப் பெற்றுள்ளன. இவை இயற்கை மணம் வீசும் அழகான பாடல்களாகும். மார்கழி நீராட்டு விழா, வைகை ஆற்றில் புது வெள்ளம் பற்றி இந்நூல் நன்கு சித்திரித்துக் காட்டுகிறது. எட்டுத் தொகை நூல்களில் தனித்து நிற்கின்ற பெருமையுடையது.

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றுமுள்ள.. (23ஆம் பக்கத்திலிருந்து)

பொருட் சிறப்பாலும் நுண்மான் நுழைபுலச் சிறப்பாலும் "ஓங்கு பரிபாடல்" என இந்நூல் சிறப்பித்துக் கூறப்படுகிறது. தமிழ்மக்களின் பழக்க வழக்கங்களும், நால்வகை உறுதிப் பொருட்களையும் இயற்கைக் காட்சிகளையும், காதல் சிறப்புக்களையும், வீரர் பெருமைகளும் ஆடலும் பாடலும் பிறவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பரிமேலழகர் இந்நூலுக்கு உரை செய்துள்ளார்.

திருமால் ஆதிசேடன் என்னும் பாம்பினை உடையவன், திருமகளை மார்பில் உடையவன், ஒரு குழையை உடைய பலதேவனாகவும் இருப்பவன் அந்தணரின் அருமறைப் பொருளானவன் எனப் போற்றுகிறது பரிபாடல் (பரி. 1:1 14). மற்றும் ஐம்பெரும் பூதங்களாகவும் இருப்பவன் (பரி.13:15 25) என அவன் புகழைச் சொல்லி வழிபடுகின்றனர் மக்கள்.

எல்லாப் பொருளும், பொருளின் தன்மையும் திருமால் என்பதை, கீழ்க்கண்ட பரிபாடல் பாட்டு விளக்குகிறது.

தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ!
கல்லினுள் மணியும் நீ , சொல்லினுள் வாய்மை நீ!
அறத்தினுள் அன்பு நீ, மறத்தினுள் மைந்து நீ!
வேதத்து மறை நீ, பூதத்து முதலும் நீ!
வெஞ்சுடர் ஒளியும் நீ, திங்களுள் அளியும் நீ!
அனைத்தும் நீ, அனைத்தின் உட்பொருளும் நீ!
(பரி. 3:63-68)

எனப் போற்றுகின்றார் புலவர் கடுவன் இளவெயினனார்.

(தெறல் - வெம்மை, நாற்றம் - மணம், மணி - நீலமணி, மறம் - வீரம், வாய்மை - உண்மை, மைந்து - வலிமை, பூதம் - நிலம், ஆகாயம், காற்று, தீ, நீர் ஆகிய ஐம்பூதங்கள், வெஞ்சுடர் - சூரியன், திங்கள் - நிலவு, அளி - குளிர்ச்சி) (வளரும்)

## பாடினால் என்ன..

(14ஆம் பக்கத்திலிருந்து)

அம்மாவைப் பெரும்பான்மையான குழந்தைகள் இப்போ மம்மி என்று அழைப்பதால் தானும் அந்தச் சொற்பிரயோகத்தை அப்படியே பயன்படுத்துகிறார் புலவர். சமுதாயத்திலே அந்தச் சொல் புகுந்து விட்ட பிறகு அதை தூர வீசுவதால் என்ன பயன் என்று புலவர் நினைத்திருக்கலாம்.

கொழும்பு நகரில் ஒரு பொழுது என்ற கவிதையில் புலவரின் ஆங்கிலத்தைப் பாருங்கள்.

கல்லொடு மண்ணும் சேர்த்துக்
 கடையிலே செய்த தோசை
பல்லொடு செய்த போரில்
 பலத்ததோர் வெற்றி காண
மெல்லவே எழுந்து அந்த
 இலைப்பொருள் எறிந்தே பிள்ளாய்
பில்லினைக் கொணர்க என்றேன்
 பெற்றனன் கொடுத்தேன் வந்தேன்

பில்லினைக் கொணர்க. ஏன் பற்றுச் சீட்டு என்று பாட மாட்டீர்களா புலவரே என்று நாம் கேட்டால் நான் பாடுவது இருக்கட்டும். நீ பேசும் போது உன்வாயில் பற்றுச் சீட்டு என்ற தமிழ்ச் சொல்லா வருகிறது? இல்லையே. பில் என்று தானே கேட்கிறாய்? நான் அதைக் கவிதையில் பாடினால் என்ன தப்பு? இப்படித்தான் புலவரின் ஆத்மா கேட்கும்!


# Less Payment Higher Return

**100K - Term Life Insurance for 20 years**

| AGE | 20 | 25 | 30 | 35 | 40 | 45 | 50 |
|---|---|---|---|---|---|---|---|
| Monthly Payment - Male | $12.69 | $12.78 | $12.87 | $14.22 | $17.64 | $25.65 | $39.33 |
| Monthly Payment - Female | $10.80 | $10.80 | $10.89 | $12.75 | $14.40 | $18.99 | $28.44 |

**100K - Whole Life Insurance**

| AGE | 20 | 25 | 30 | 35 | 40 | 45 | 50 |
|---|---|---|---|---|---|---|---|
| Monthly Payment - Male | $43.15 | $48.90 | $57.87 | $68.44 | $81.22 | $103.65 | $122.28 |
| Monthly Payment - Female | $39.00 | $43.15 | $52.20 | $61.76 | $71.07 | $88.33 | $106.78 |

2 வருடங்களுக்கு ஒரு தடவை உங்கள் ஆயுள் காப்புறுதியை மீள்பரிசீலனை செய்தல் அவசியம்!

இலவச ஆலோசனைகளுடன் பூரண விளக்கம் தருகின்றோம்

- Drug, Dental and Medical plan
- Mortgage and Travel Insurance
- RRSP - Loan and Investments
- RESP - Education Saving Plan


- Life Insurance - Term, Whole life
- Disability Insurance
- Critical Illness Insurance
- Non-Medical Insurance - Age 40 to 85

**Critical Illness Insurance**

கொடிய நோய்கள் வராது விட்டால் கட்டிய பணம் முழுவதும் 65 வயதில் திருப்பித்தரப்படும்.

கட்டிய பணத்திற்கு முழு உத்தரவாதம் உள்ளது

Ideas to simplify your Family protection



**Mogan Selliah**
Insurance Advisor - Royal Brokers

**Direct: 416.569.3200**
Email: mogansellliah@gmail.com

**Non Medical Insurance**

குறைந்த கட்டணத்தில் 85 வயது வரையிலான மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதி

**RESP கல்வி சேமிப்புத் திட்டம்**

பிள்ளைகளின் உயர்கல்வி சேமிப்புத் திட்டத்தின் மூலம் அரச மானியமாக $9200 வரை பெறமுடியும்

Royal Brokers Corporation · RBC Insurance · Industrial Alliance · Assumption Life · Sun Life Financial · Equitable Life · La Capitale · BMO Insurance

**Knowledge. Passion. Results.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்














- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com


Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Director

**416-993-0826**

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-258-6759**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high, with your thoughts

PROMAR Ltd.




- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!


One stop for all your promotional needs.




PROMAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

***Why think so long...?***





- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements

Vivek Subramaniam
Sales Representative
416- 898 4846

Homelife/Future
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated







# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அறலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# உலக கிரிக்கெட் வீரராக சங்கக்காரா தெரிவு

இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவராக விஸ்டன் கிரிக்கெட் சஞ்சிகையினால் பெயரிடப்பட்டுள்ளார்.


உலகின் மிகச்சிறந்த 5 கிரிக்கெட் வீரர்களாக அஞ்சலோ மத்தியூஸ், நியூசிலாந்தின் ஜீடன் பட்டேல், இங்கிலாந்தின் மொயீன் அலி, கெரி பலான்சே, அடம் லயித் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். இதேவேளை ஆண்டுக்கான உலகின் முன்னணி கிரிக்கெட் வீரராக இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார சங்கக்காரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கக்காரா இந்த விருதை பெறவுள்ள இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். அதற்கு முன்னர் இந்தியாவின் விரேந்திர ஷேவாக் இரண்டு முறை இந்த விருதினை பெற்றிருந்தார்.

1889ம் ஆண்டு முதல் விஸ்டன் சஞ்சிகையின் ஆசிரியரினால் வருடத்தின் 5 சிறந்த வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர்.
2004ம் ஆண்டிலிருந்து உலகின் முன்னிலை வீரருக்கான விருதும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஐசிசி தரவரிசை: டிவில்லியர்ஸ் முதலிடம் 2வது இடத்தில் தொடரும் சங்கக்காரா

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.



ஐசிசி வெளியிட்ட புதிய தரவரிசைப் பட்டியலின்படி, உலக சாம்பியன் ஆஸ்திரேலியா 122 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

இந்திய அணி 116 புள்ளிகளுடன் தொடர்ந்து 2வது இடத்தில் உள்ளது. 3வது இடத்தில் தெனனாபிரிக்கா (112 புள்ளி), 4வது இடத்தில் இலங்கை (108), 5வது இடத்தில் நியூசிலாந்து (107), 6வது இடத்தில் இங்கிலாந்து (101), 7வது இடத்தில் பாகிஸ்தான் (95) ஆகிய அணிகள் உள்ளன.

துடுப்பாட்டத் தரவரிசையில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் (902) முன்னிலை வகிக்கிறார். இலங்கை அணியின் குமார சங்கக்காரா 2ம் இடத்தில் உள்ளார்.
இந்தியாவின் விராட் கோஹ்லி 4வது இடத்திலும், தவான் 6 மற்றும் இந்திய அணித்தலைவர் டோனி 8வது இடத்தில் உள்ளனர்.
பந்துவீச்சு தரப்படுத்தலில் ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க் முதலிடத்தில் உள்ளார்.

### சீர்கேடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கை கிரிக்கெட்: முக்கிய பொறுப்பில் வெற்றிமுனி

இலங்கை கிரிக்கெட் வாரியத்தில் நிர்வாகச் சீர்கேடுகள் நடந்துள்ளதாக ஏற்கனவே குற்றசாட்டுகள் எழுந்தன.
இதைத் தொடர்ந்து அதனை இடைக்கால கமிட்டி நிர்வகிக்கும் என்று சமீபத்தில் இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.
இந்நிலையில் 9 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை கிரிக்கெட் வாரிய இடைக்கால கமிட்டி முன்னாள் வீரர் வெற்றிமுனி தலைமையில் செயற்படும் என்று இலங்கை விளையாட்டு மந்திரி நவின் திசநாயக்க அறிவித்துள்ளார்.
சுனில் வெற்றிமுனி, 1975 மற்றும் 1979 ஆகிய இரு உலகக்கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணிக்காக விளையாடியவர்.
மேலும் விமானியாகவுள்ள வெற்றிமுனி, 1996ம் ஆண்டு உலகக்கிண்ணம் வென்ற இலங்கை அணியை அழைத்து வர விமானத்தை ஓட்டிச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank® You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE Education Funds

**RESP SAVINGS PLAN**

**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

**உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு**

**WWW.KERUDAVIL.COM**


**INCOME TAX PREPARATION**

**Personal Income Tax**

**Small Business Income Tax**

**Computerized Returns**

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

# நீத்தார் நினைவு

## அமரர் ஆ. தா. ஆறுமுகம்

இவர் புன்னாலைக்கட்டுவனில் பூத்தார். தெல்லிப்பளையில் மலர்ந்தார். இளவாலையில் மணந்தார். ஆசிரியராக அதிபராக சென்ற இடமெல்லாம் தேன் சொரிந்தார். நியூஸிலாந்தில் வாசம் வீசினார். அண்மையில் தனது 90 ஆவது வயதில் உதிர்ந்தார்.

வித்துவானும் கலைமாமணியும் அவரது அறிவுக்கு அழகூட்டிட வெள்ளை நிற உடுப்பு அவரது உருவத்துக்கு எழிலூட்டியது. வெலிமடை நெல்லியடி சுழிபுரம் கலஹா ஒட்டுசுட்டான் தெல்தெனியா ஆகிய பகுதிகள் அவரிடம் பயின்றன. பிள்ளைகள் பல அவரால் நல்லபெயர் சூடப்பெற்றதில் உறவுகள் உவகையுற்றன. ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மண்டப மொன்று வித்துவான் ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் பி.ஏ. என அவரது பெயரை தனதாக்கி உயர்வுற்றது.

விண் பொறியாளராக பட்டம் பெற்று பேராதனை பல்கலை கழக பேராசிரியராக பதவி வகித்த அவரது மூத்த புதல்வன் இளமுருகன் வருத்தம் வந்து திடீரென மறைய அந்த வருத்தமே வருத்தியதில் அவரது மனைவி சிவஞானம்பிகையும் சிறிது காலத்தின் பின் காலமானார். இளைய மகன் இளங்கோ அரச அலுவலராக நியூஸிலாந்தில் பணி புரிகின்றார்.

அவருடனான எனது உறவு எனது திருமணம் தந்தது. அவருடனான எனது தொடர்பு எனது ஊர் தந்தது. ஆலயங்களின் சிறப்புகளை அறிந்தவர். அதனால் ஆலயங்கள் சிறக்க வேண்டும் என விரும்பியவர். கோவில்கள் பலவற்றில் உபயங்கள் பல புரிய அருள் பெற்றவர். செய்தும் அருள் பெற்றவர். முருக பக்தர். 50 வருடங்களுக்கும் மேலாக கந்தசஷ்டி விரதம் அனுஷ்டித்தவர். இலங்கையிலும் இந்தியாவிலும் ஸ்தல யாத்திரை மேற்கொண்டு அறுவகை தரிசனங்களும் கைவரப் பெற்ற அருளாளர். ஊர் வாழவேண்டும் என அவர் கண்களை மூடி கைகளை கூப்பி பலமுறை பிரார்த்திப்பதும் அதனைப் பார்தவர்களின் இதயம் மலர்ந்து விரிவதும் ஊர் அறிந்தது. சமூக சேவையில் அவருக்கிருந்த ஈடுபாட்டை அவர் வாழ்ந்த பகுதிகளின் பதிவேடுகள் பாதுகாப்பாகவிருந்தால் அடுத்த தலைமுறைக்கும் பெருமையுடன் எடுத்துரைக்கும்.

சுதந்திரமான சிந்தனை. நேர்மையான செயற்பாடு. பரந்த மனப்பான்மை. சரளமாகப் பழகும் சுபாவம். அநாவசியமாக எதிலும் குறுக்கிடாதிருத்தல் என்பனவற்றை சமுதாயம் அவரிடம் கற்றது. பொதுப் பணிக்கான எந்த முயற்சியிலும் முகம் வருந்திடாது ஆர்வமுடன் செயற்பட்ட உயரிய குணத்தை சமுதாயம் அவரிடம் கண்டது. நண்பர்களையும் உறவினர்களையும் நல்வழிப்படுத்தும் சுபாவத்தால் மற்றவர்களது மனத்தில் கௌரவம் மிக்கவராக அவர் திகழ்ந்தார். நாலு பேருக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையால் மற்றவர்களது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராக அவர் வாழ்ந்தார். அதிபராக இருந்தவர்களுள் எளிமையாக நேர்மையாக வாழ்ந்தவர் ஒருவரைக் காட்டச் சொன்னால் எவ்வித தயக்கமுமின்றி பலரது விரல்கள் அவர் பக்கமும் நீண்டன. அதே போல இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழ்ந்து காட்டியவர் யார் என்று கேட்டதற்கும் பலரது கண்கள் அவரையே நாடின.

அன்பு கருணை பாசம் நேசம் இரக்கம் கனிவு மிகுந்தவராகவும் செருக்கு வீரம் கர்வம் திமிர் ஆதிக்கம் தெரியாதவராகவும் நெருங்கியவர்களுக்கு அவர் தோன்றினார். நியூஸிலாந்து சென்றபின்பும் முதுமையிலும் இளமைத்துடிப்புடன் கணினியை விருப்புடன் கற்று அதில் தேர்ச்சி பெற்று முயன்றால் எதனையும் முடிக்கலாம் எப்பவும் முடிக்கலாம் என்பதற்கு முன்னுதாரணமானவர். எதையும் தீவிரமாக யோசித்து நிதானமாக திட்டமிட்டு தெளிவாக செயல்படுத்தும் மதிநுட்பமும் விசாலமான சிந்தனையும் இலங்கையில் அதிபராக இலங்கிய அவரை நியூஸிலாந்தில் எழுத்தாளராக்கின.

சக்தி, வீட்டில் விஞ்ஞான விளையாட்டு, நம்மக்களின் மனக்கணக்கு, தமிழ் நொடிகள், தமிழ் பழமொழிகள், மனதில் மலர்ந்தவை, வீபூதி, தங்கத்தாத்தாவின் சிறுவர்பாடல்கள், ஒரே மைய வித்தைச்சதுரங்கள், நியூஸிலாந்தில் தமிழன் பதித்த சுவடுகள் என பத்து நூல்களை மிக வேகமாக எழுதி தானே அச்சமைத்து தானே வடிவமைத்து ஆச்சரியமூட்டியவர்.

தமிழ் நொடிகள், நியூஸிலாந்தில் தமிழன் பதித்த சுவடுகள் ஆகியவை கனடாவிலும் மீள் பதிவு பெற்றன. தமிழர் தகவலுடன் அவருக்கிருந்த நெருக்கம் விசாலமானது. பல தடவைகள் முகப்பில் படங்களும் உள்ளே குறிப்புகளும் வெளிவந்துள்ளன. மருத்துவர்கள் அவருக்கு காலக்கெடு விதித்திருந்த நிலையிலும் புறநானூறு பற்றி தான் கற்றதை கற்பிக்கும் வேட்கை அவரிடமிருந்தது. மரணப்படுக்கையிலிருந்தும் புறநானூற்றில் புதுநானூறு காண விரும்பிய அவரது குரல் என்னுள் ஓங்கி ஒலிக்கின்றது.

\- எஸ். ஜெகதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**R & S AUTO SALES**

Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha


**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**


## ஆண்டுகள் 26 ஆயிடினும்
## என்றென்றும் நீ எம்முடனே!

தனயனாக
05-05-1970



தந்தைக்காக
10-05-1989

## செல்வன் எஸ். தி. அகிலன்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவன்
கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவன்; விளையாட்டு வீரன்

ஈழத்தமிழரைக் காக்கவென வந்த இந்திய அராஜகப் படையாலும்
அதற்குத் துணைபோன தமிழின துரோகக் கும்பலாலும்
தாய்மண்ணில் பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் போராடிய
தந்தைக்காகப் பலியெடுக்கப்பட்ட பாலஅபிமன்யு.

தனியொரு மகவாய் வாய்த்துத்
தகவொடு கல்வி வீரம்
நனிசிறந் துயர்ந்து யாரும்
நாடுதற் கினிய னாகி
கனிந்தநல் லிளைஞ னாகி
கட்டிளம் காளை யான
இனியனெம் அகிலன் தன்னை
இழக்கவும் விதியா யிற்றே!

அம்மா, அப்பா
குடும்ப உறவினர்கள், நண்பர்கள்
416.920.9250




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**



- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters



உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

தமிழர் தகவல் பிரதிகளை மாதாந்தம்
முத்திரைக் கட்டணம் செலுத்தி
தபாலிலும் பெறமுடியும். விபரங்களுக்கு

416 920 9250

e-mail: tamilsinfo@sympatico.ca

## ALL COUNTRIES TAMILS YELLOW PAGE

**CANADA & INTERNATIONAL MEDIA, NEWS, WEBSITE**
**BUSINESS ADVERTISEMENTS & DIRECTORY**

**BIRTHDAY WISHES & ANNIVERSARY :-** Wedding & Business

**ARANGETRAM :-** Bharatham, Mirudangam, Veena & Etc... - **MATRIMONIAL :-** Marriage Broker Services

**JOB AGENCY :-** All Kinds of Employment Services - **FUNERALS :-** Obituaries & Etc...

2296 EGLINTON AVE, EAST @ BIRCHMOUNT RD UNIT 3C LOWER LEVEL SCARBOROUGH - TORONTO - ONTARIO - M1K 2M2 - CANADA
TEL: 416 644 7273 - TEL & FAX: 416 613 2919 - MOB: 416 752 4444 WEB: WWW.TAMILSYELLOWPAGES.COM E-MAIL: TYP@TAMILSYELLOWPAGES.COM

**WWW.ENGLISHYELLOWPAGE.COM - WWW.ASIANSYELLOWPAGE.COM**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# மனச்சான்று

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க. ஒருவன் தன் நெஞ்சு அறிவது ஒன்றனைப் பிறர் அறிந்திலர் என்று பொய்யாதொழிக: பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் – பொய்த்தானாயின், அதனை அறிந்த தன் நெஞ்சே அப்பாவத்துக்குக் கரியாய் நின்று: தன்னை அதன் பயனாய துன்பத்தை எய்துவிக்கும்.

பரிமேலழகர் கரி – சாட்சி

சான்று, சாட்சி, மனச்சான்று – மனச்சாட்சி – மனநீதி என்றும் சொல்வர்.

நீதிமன்றங்களுக்கு பொய்ச்சாட்சி மூலம் ஒரு வழக்கை ஒப்பனைப்படுத்துவதுண்டு. வாதி, பிரதிவாதிகளின் நாவன்மையால் வழக்குகள் ஒப்பனைப்படுத்துவதுண்டு. மனநீதிதான் தீர்ப்பு வழங்கும். இளங்கோவடிகள் தந்த இலக்கியம் 'பொய்க்கரிபோகன் மின்' என உபதேசிக்கிறது. வரலாற்றுச் சாசனங்கள் தொல்பொருட் சான்றுகளை வைத்துத் தீர்மானிக்கப்படும். எனவே விஞ்ஞான சாதனங்கள் இதற்கு உபகாரிகளாம். ஆக சான்று என்பது பல பொருளிலே எடுத்தாளப்படுகிறது. 'பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய் போலும்மே' என ஔவையார் பேசப் படித்துள்ளோம். சத்தியம் செய்தல் உலகியல் வழக்கு. நீதியென்று பேச வந்தால் – தராசு போல இருக்க வேண்டும். இதை வள்ளுவப் பெருந்தகை இப்படிக் கூறினார்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கணி
118 – குறள்

கோல் – தராசு. நீதிமன்றத்திலும், நியாயவாதிகள் அலுவலகங்களிலும் இது அடையாளமாகப் போடப்பட்டிருக்கும். நீதி தீர்க்குமிடம் நீதிமன்றம். இந்நீதி அரச நீதி, சமூக நீதி, தெய்வ நீதி, மன நீதி என வகுக்கப்பட்டாலும் –இறைவனைத் தியாகம் பேசியது சைவ நெறிதான். அரசனின் அடையாளம் செங்கோல் – எதிர் கொடுங்கோல். அரச சபையிலும், நீதிமன்றிலும் செங்கோல் முக்கிய சின்னம். அரிச்சந்திரன் சத்தியவந்தன். நம் காலத்திற் காந்தியடிகள் சத்திய சோதனை செய்து வென்றார். இந்த மனச்சாட்சியும், தெய்வத்தின் சாட்சியும் நம்மை நல்வழிப்படுத்துவன. மனம் உடையவன் மனிசன். மனிதன் எனவும் சொல்வர். மனச்சாட்சியைக் கொல்லக்கூடாது. மனம் எந்நேரமும் எமக்கு நல்லதையே அறிவுறுத்தும். நாம்தான் வழிமாறிப் போகின்றோம். போனபின் மனம் எந்நேரமும் அராத்திக் கொண்டே இருக்கும் என்று வள்ளுவம் எடுத்துக்கூறும். எனவே நாம் மனச்சாட்சியைக் கொலை செய்யக்கூடாது அன்றோ. அதற்குக் கழுவாயே இல்லை. மன்னிப்பும் கிடையாது.

தன்நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்
293 – குறள்

எந்நேரமும் மனம் உறுத்திக் கொண்டேயிருக்கும். நான் தவறு இழைத்துவிட்டேன். பிழை விட்டுவிட்டேன் என் உறுத்திக் கொண்டேயிருக்கும். மனச்சான்று பிழை சரி, நீதி அநீதி, குறை குற்றம், நன்று தீது எதுவென ஓயாது சொல்லிக்கொண்டேயிருக்கும். பொய் கூறாதே, களவெடுக்காதே, கொலை செய்யாதே, தீங்கிழையாதே, பிற உயிர்களை இம்சைப்படுத்தாதேயென சதா இடித்துரைப்பது மனித மனத்தின் வேலை. இதிலே கிடைத்த பாடங்கள், படிப்பினைகள், அனுபவங்கள் ஒவ்வொருவரையும் செவ்வழிப்படுத்தும். இந்த உண்மைகளை உணராத மனிதர்கள் சிலவேளை ஐயறிவு உடையவர்களாய் இயங்குவதும் இயல்பே. மனித இயல்பும் மனித சுபாவங்களும் நேரிய வழியில் நடக்க நற்போதனைகள் உபதேசங்கள், அறிவுரைகள் உதவலாம். நீதிநூல்கள் எம்மை நல்வழியில் இட்டுச் செல்ல உதவும். அனுபவங்கள் எம்மை வழிநடத்தி, மேன்மைப்படுத்தும். பட்டறிவு உற்றறிவு ஊன்றுகோலாம். மனிதன் சிறந்தவனாக, உயர்ந்தவனாக வாழாவிடினும் சராசரி மனிதனாகவேனும் வாழ வேண்டுமன்றோ. எத்தனை நீதிமன்றங்கள் இருந்தாலும், அவை வழக்கிற் தீர்ப்புக் கூறினும், மனச்சாட்சியே நம் நீதிபதி, எம்மோடு உடனாக இருப்பது மனம். மனம் சொல்வன நற்சாட்சியங்களே. மனச் சாட்சியை மீறி நாம் இயங்கக்கூடாது என்ற பாடம் எமக்கு வழித்துணையாம்.

என்வேதான் பெரியார்கள் மனத்தைக் கூப்பிட்டு விளித்துப் பேசினார்கள். இவற்றை நாம் மனத்திற் கொள்ளாமல் அபகீர்த்திகளை அவமானங்களை அடைந்து மனிதத்துக்கு மாசு இழைக்கிறோம். எனவே மனச் சுத்தம் முக்கியமாம்.

அனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற
34 குறள்

மனக்குற்றமில்லாதவனாய், மனமாசு அகற்றி நம்மை செந்நெறிப்படுத்தின் மனித வாழ்வு சுபீட்சமடையும். யாரைப் பார்த்தாலும் மனம்போல வாழ்வு என்பர். இந்த மனக்குரங்கு பற்றி வள்ளலார் எடுத்துப் பேசுகின்றார்.

மனம் எனும் ஓர் பேய்க்குரங்கு மடைப் பயலே
நீதான்
மற்றவர்போல் எனை நினைத்து மருட்டாதே
கண்டாய்
இனமுற என்சொல்வழியே இருத்தியெனில்
சுகமாய்
இருந்திடுநீ என்சொல்வழி ஏற்றிலை ஆனாலோ
தினையளவுன் அதிகாரம் செல்ல வொட்டேன்
உலகம்
சிரிக்க உனை அடக்கிடுவேன் திருவருளால்
கணத்தே
நனவில் எனை அறியாயோ யார் என இங்
கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே

கொலைகள் எல்லாவற்றிலும் கொடியது மனச் சாட்சிக் கொலையே என்று உணர்வோமாக.

நீதியாய் வாழ்வோம்.
நீதியானவர்களோடு கூடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் 27 ஆம் திகதி
கனடிய தின விழா
விபரங்கள் அடுத்த இதழில்



SABESAN'S Choice

தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

Laminate, Mirror, Panel, Closet Droos
Carpet, Hardwood, Tiles, Granite Flooring
Windows + Doors, Kitchen + Bath
Renovation or NEW!!!!



Sabesan's Choice
416 605 1990

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

JRB Universal Inc.
Almost All Services Available

647 289 6164



R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**$ 899.900**



**Bayview & Newman**
Detached, 2 - Storey
Bedrooms: 4 + 1
Washrooms: 4
Mattamy Model

**$ 899,900**



**14th Avenue & Havelock Gate**
Detached, 2-Storey
Bedrooms: 4 + 1 Washrooms: 4
Premium Lot With $$$$
Spend On Recent Upgrades

**$ 779,000**



**Airport & Castlemore**
Detached, 2-Storey
Bedrooms:4
Washrooms:4
9' Ceiling 10' High Basement

**$ 759,900**



**Salem Rd N/Harper Hill Dr.**
(Ajax)
Detached, 2-Storey
Bedrooms: 4 Washrooms: 4
Monarch Build 10 Months Old

**$ 679,800**



**9th Line/14th Ave**
Detached, 2-Storey
Bedrooms: 3 + 1
Washrooms:4
Excellent Location

**$224,000**



**Mccowan/Sheppard**
Condo Apartment
Bedrooms: 3 Washrooms: 2
Very Well Kept Bright
And Spacious

**$ 205,000**



**Morningside/Ellesmer**
Condo Apartment
Bedrooms: 2 Washrooms: 2
A Beautiful, Spacious
And Well Kept ----

**$ 79,000.00**




**Midland/Lawrence**
Bar & Grill Sale Of Business
Without Property
High Density Residential And
Commercial Area

**$ 499,900**




**Garrard / Dryden (Whitby)**
Detached, 2-Storey
Bedrooms: 4
Washrooms: 3
All Brick Family Home

**$ 569,900**



**Bellamy/Lawrence**
Detached, Bungalow
Bedrooms: 3 + 2
Washrooms: 2
Beautifully Renovated

**$ 599,000**



**Brimley/Eglinton**
Detached, Bungalow
Bedrooms: 3 + 3
Washrooms: 2
Fully Renov'd From Top To Bottom!!

**$ 649,900**



**Bellamy/ Brimorton**
Detached, Bungalow
Bedrooms: 3 + 3
Washrooms: 2
Renovated From Top To Bottom

**$ 429,800**



**Thickson & Columbus**
Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 3
Bright Modern -----

**$ 639,900**




**Sandalwood & Creditview**
(Brampton)
Detached 2-Storey
Bedrooms: 5 Washrooms: 3
Matamy Built 9 Ft Ceiling Home

**$ 619,900**



**Midland & Ellesmere**
Att/Row/Twnhouse
Bedrooms: 3 + 1
Washrooms: 4
Immaculate 2285 Sqft



# வீடு, வியாபார நிலையங்களை வாங்க விற்க

கனடியத் தமிழர் சமூகத்தில்
நம்பிக்கையான ஒரு முகவர்

# கமல் நவரட்ணம்

அடமான (Mortgage)
ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்


**Kamal** Navaratnam
Sales Representative
Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

**HomeLife/Future Realty Inc.**
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

*Trust and reliable services*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org